# ஜநவிநோதிநி.

இல. 2.] பெப்ருவரிமீ 1877. [புஸ்த. VIII.

## சிங்கவேட்டை.

சிங்கங்களை வேட்டையாடுவது மிகவும் அபாயமானகாரியம். சிங்கங்கள் குறிக்கு அகப்படுவதே வருத்தம். அப்படியின்றி இரண்டொன்று அகப்பட்டுக்கொண்டு அடிபட்டுப்போமானால் மற்றவையெல்லாம் அந்த ஜாடையறிந்துகொண்டு அவ்விடத்தில் இராமல் ஓடிப்போம். சிங்கவேட்டையைப்பார்த்துவந்த யாத்திரைக்காரர் ஒருவர் தான் கண்ட வரலாற்றை எழுதியிருக்கிறார். அதை நாம் ஒருவாறு அடியில் தெரிவிக்கிறோம்.

"நான் போயிருந்த ஊரில் அநேகர் ஒருநாள் சிங்கவேட்டையாடும்படி காட்டுக்குப்போனார்கள். நானும் என் தோழன் ஒருவனோடு, அவர்கள் ஒரு சிங்கத்தை அடித்துச் சோர்ந்துபோகிற தருணத்தில் அவர்களை உற்சாகப்படுத்தலாமென்று அவ்விடத்துக்குப் போனேன். மரங்களும் செடிகளும் அடர்ந்த ஒரு குன்றில் ஒரு பாறையில் சிங்கமொன்று உட்கார்ந்திருந்தது. அந்தக் குன்று சுமார் கால்மைல் நீளமிருக்கும். இங்கிருந்துபோனவர்களெல்லாரும் அந்தக் குன்றை வளைத்துகொண்டு கொஞ்சங்கொஞ்சமாய் ஏறி அந்த சிங்கத்தைச்சுற்றி நெருங்கினார்கள். நானும் அதிக சமர்த்தனான என் நேசனும் கீழேநின்றபடியே அதைப் பார்த்திருந்தோம். அந்த மனிதவட்டத்தின் மத்தியிலிருந்த சிங்கத்தை நான் சுடவேண்டுமென்று கருதியிருக்க, எனக்கு முன்னமே என் தோழன் அதைக் குண்டுவைத்து அடித்தான். அது குறிதப்பிச் சிங்கத்தின்மேல்படாமல் அது உட்கார்ந்திருந்த பாறையில் படவே, நாம் ஒரு கட்டியாவது கல்லாவது ஒரு நாய்மேல் எடுத்துப்போட்டால்

அது வீழ்ந்தவிடத்தை அந்த நாய் மோந்துபார்ப்பதுபோல், சிங்கம் அவ்விடத்தை மோந்துபார்த்து உடனே அந்த மனிதர்களின் நடுவே விழுந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போயிற்று. அவர்கள். அதை எதிர்த்து அடிக்கப்பயந்தார்கள். மறுபடியும் அவர்கள் வளைந்துகொள்ளும்போது அவர்கள் நடுவே இரண்டு சிங்கம் தென்பட்டன. அவர்கள் அத்தேசவழக்கப்படியே செய்திருப்பார்களானால் அவை வெளிப்புறப்படும்போதே ஈட்டியால் குத்திப்போட்டிருக்கலாம். நாம் அதை அடித்தால் எங்கே ஒருவேளை மனிதர்களின்மேலே பட்டு அந்த ஆரவாரத்தில் சிங்கமும் ஓடிப்போகிறதோவென்று நாங்கள் அதை அடியாமல் வீட்டுக்குப்போம்படி திரும்பினோம். அம்மலை முனையண்டைபோம்போது அங்கே ஒரு பாறையில் சிங்கமொன்று இருக்கக்கண்டோம். நாங்களிருந்த இடத்திற்கும் அதற்கும் முப்பதே அடிதூரம் இருந்ததனால் நன்றாய்க் குறிபார்த்து குண்டுவைத்தடித்தேன். இதோ அதன்மேல் அடிபட்டது! அடிபட்டது! என்று அங்கிருந்தவர்கள் கூவினார்கள். வேறு சிலர், இதோ மறுபடியும் யாரோ ஒருவர் அடித்திருக்கிறார். அவரண்டைபோவோம் வாருங்கள் என்று இரைச்சலிட்டார்கள். அதைச் சுட்டவர் வேறொருவரும் என் கண்ணுக்குத் தென்படவில்லை. அந்தச் சிங்கம் வாலைநெறித்துக்கொண்டு கம்பீரமாய் நின்றது. நான் மறுபடியும் சுடும்படி துப்பாக்கி கெட்டிப்பதற்குமுன்னமே அது என்மேல் பாய்ந்துவந்து என் தோளைக் கவ்விக்கொண்டு காதண்டை அதிக பயங்கரமாய் முழக்கஞ்செய்து, வலிவுள்ள நாய் ஒரு எலியைப்பிடித்து ஆட்டுவதுபோல் என்னை ஆட்டிவிட்டது. நான் பூனையின்கையில் அகப்பட்ட எலிபோல் நடுங்கிப்போனேன். அதனால் எனக்கு ஒருவகையான மதிமயக்கமுண்டாகி, நடக்கிற செய்திகளெல்லாம் தெரிந்திருந்தும், பயமும் வருத்தமும் தெரியாமலேயிருந்தன. அப்படி எதிரே அதிக பயங்கரமான சிங்கம் நின்றுகொண்டிருக்க அதைப்பார்த்துப் பயமுந் திகிலும் சிறிதுந் தோன்றாமலிருந்தது, நமக்கு அதிகமான வருத்தங் கூடாதென்று, நம்மிடத்தில் இரங்கிக் கருணைக்கடலான கடவுள் செய்த மாயமேயன்றி வேறென்ன? நான் அந்தச் சிங்கத்தின் சுமையைத் தாங்கமாட்டாமல் கொஞ்சம் அண்ணாந்துபார்க்கையில், அந்தச் சிங்கம் தன் ஒருகாலை என் தலையின் பின்புறத்தில் வைத்துக்கொண்டு என் தோழன்மேலேயே கண்ணாயிருந்தது. அப்

போது அவன் அதைச் சுட எத்தனமாயிருந்தான். அவன் சுட்ட குண்டு குறிதப்பிப்போகவே, சிங்கம் என்னைவிட்டுவிட்டு அவன் மேல் பாய்ந்து அவன் தொடையைக் கவ்விக்கொண்டது. காட்டெருமை தெருத்தியபோது முன் ஒருதடவை நான் தப்புவித்த ஒருவன் அத்தருணத்தில் அந்தச் சிங்கத்தைக் குத்தும்படி முயன்ருன். அதுதெரிந்து சிங்கம் என் தோழனை விட்டுவிட்டு அவன் மேல் பாய்ந்தது. அப்போது முன்னமே அதின் தேஹத்தில் பாய்ந்திருந்த ரவை நன்ருய் உறைத்து உடம்புதெரியாமல் கீழே விழுந்தது. இவ்வளவு நடந்ததற்கும் பிடித்தகாலம் ஒரு நிமிஷந் தான். இவ்வளவும் அதின் மரணாவஸ்தையில் நடந்திருக்கலாம். அது என் உடலெலும்புகளைச் சின்னுபின்னமாய் நசுக்கிப்போட்டாலும் கேட்பாரில்லை. தெய்வாதீனமாய் ஏழெட்டுப்பல் காயத்தோடு விட்டுவிடவே நான் சந்தோஷமாய் வீடுவந்துசேர்ந்தேன்." என்று ஒரு பிரயாணக்காரர் சொல்லியிருக்கிருர். இதைக் கேட்கும்போது சிங்கவேட்டை எவ்வளவு துணிச்சலான செய்கையென்று நமக்குத் தெரியவருகிறது! இப்படிப்பட்ட சிங்கவேட்டையின் காக்ஷியை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிறபடத்தில் ஒருவாறு காணலாம்.

## மனேபாவம் அல்லது உட்கருத்து.

சமயத்துக்குத்தக்கபடி மனதில் தோன்றும் எண்ணம் மனேபாவம் என்னப்படும். மனேபாவம் உண்டானபின்பு பிரயத்தனம் நடந்து காரியசித்தியாகும். நல்லசெய்கையென்று சொல்வதெல்லாம் நல்ல மனேபாவத்தோடு நல்ல விஷயமாக நல்வழியில் செய்திருக்கவேண்டும். இதுவே நற்செய்கையின் லக்ஷணம். இது சரியான லக்ஷணமென்று யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். ஆயினும் நம்முடைய செய்கை இந்த லக்ஷணத்துக்கு ஒத்துவருவது மிக அரிது. நமது செய்கையில் மனேபாவம் பலவாருக இருக்கின்றது. அதைத் தெளிவாக நிதானிப்பது கூடாது. யோசித்துப்பார்த்தால் நாம் செய்யும் காரியமெல்லாம் தனியான மனேபாவத்தால் உண்டாவதாய்க் காணவில்லை. பலவித மனேபாவத்தால் ஒரு காரியம் செய்துமுடிகின்றது. இரப்போர்க்குப் பிச்சைகொடுக்கிருேம்; சிலபேருக்கு இல்லையென்றும் சொல்லுகிருேம். ஒருவனுக்குக் கொடுப்பதேன்,மற்ருெருவனுக்குக் கொடா

திருப்பதேன்? தயாளகுணத்தால் மனதிரங்கிப் பிச்சையளிப்பதுமுண்டு, பணவிஷயத்தில் சிரத்தையில்லாமல் பிச்சைகேட்பவனைத் தொலைத்துவி டும்பொருட்டுக் கேட்டதைக்கொடுத்துப் போகச்சொல்வதுமுண்டு.

நல்ல எண்ணமின்றி நற்செய்கை செய்வதுபோலவே கெட்ட எண்ண மின்றிக் கெட்டசெய்கை செய்வதுமுண்டு. நீ என் அவருக்கு மனவருத் தம் உண்டாகும்படி செய்தாய் என்றுகேட்டால், நான் கெட்ட கருத்துக் கொண்டு செய்ததில்லையே என்று பலபேர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்படிச் சொல்லுகிறவர்கள் சிறுபிள்ளைகளல்ல; வயதிற்பெரியோரும் சொ ல்லுவார்கள். கெட்ட எண்ணங்கொண்டு கெடுதிசெய்வது யாவருக்கும் தெரிந்தகாரியம். சில விஷயங்களில் கெட்ட மனோபாவமின்றியே கெடுதி செய்யும்படியாக நேரிடும். நியாயஸ்தலங்களில் விசாரணை நடக்கும்போது என்ன கருத்துக்கொண்டு குற்றம்செய்தாயென்று குற்றவாளியைக் கேட்ப துண்டு. சில விஷயங்களில் இன்ன மனோபாவமென்று அவனுக்கே சொல் லமுடியாது. அநேகவிஷயங்களில் குற்றவாளிக்கும் வாதிக்கும் மனஸ் தாபம் இருந்ததாய்த் தோன்றுவதில்லை. அப்படிப்பட்ட விஷயங்களில் யாதொரு கெட்ட கருத்துமின்றியே குற்றம் நடந்திருப்பதாக ஊகிக்கவே ண்டியதாயிருக்கின்றது. சில ஜனங்கள் சாதாரணமாக நற்குண நற்செய்கை யுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள்கூடச் சில சமயங்களில் தவறு வதாய்க் காண்கின்றது. காரணம் இன்னதென்று விளங்குவதில்லை. அவர் களுடைய அந்தரங்கம் தெரியாதிருப்பதால் காரணம் தெரியாதிருப்ப துமுண்டு. அந்தரங்கம் தெரிந்தகாலத்திற்கூட காரணம்சொல்வதற்கு முடி யாமலும் இருக்கிறது. எப்படியெனில், நம்முடைய மனது நமக்குத் தெரியு மென்பதற்கு ஐயமில்லை. தெரிந்திருந்தும் நமது செய்கை ஒவ்வொன்றுக் கும் முகாந்தரம் சொல்லக்கூடவில்லை. இதுவே போதுமானசாக்ஷியாம். பார்த்தஉடனே சிலரிடத்தில் பிரியமும் சிலரிடத்தில் அப்பிரியமும் உண் டாகின்றது. மனோபாவமெல்லாம் விசதமாகத் தெரிவதில்லை. செய்கை வெளிப்படுகிறதேயன்றி கருத்து வெளிப்படுகிறதில்லை.

மேலே சொன்னது உண்மையானால் என்னென்ன நற்குணமும் துர்க் குணமும் நம்முடைய மனதில் புதைந்துகிடக்கின்றனவோ தெரியாது. வெளிப்படாதகுணங்கள் சிலசில சமயங்களில் பிரகாசமாகி நம்மை வேறுமனுஷர்களாகக் காணும்படிச் செய்கிறதுண்டு. "இவன் இப்படிப்பட் டவனென்று இன்றுவரைக்கும் எனக்குத் தெரியாதே" என்று எத்தனை தரம் நாம் சொல்லியிருக்கிறோம்.

அநேக விஷயங்களில் நாம் செய்கிறதற்குக் காரணம், மறைந்துகிடக் கிற மனுஷசுபாவமாகவே இருக்கின்றது. மறந்துபோயிருந்த ஒரு விஷயம் மனதிற்குத் தோன்றினபின்பு செய்கை வேறுபடுவதுண்டு. நமக்குப் பிறர் செய்த தீமை நெடுநாள்பொறுத்து மனதிற்றோன்றினால் உடனே நமக்குத்

தகாததைச் செய்யவும் பேசவும் துணிவுண்டாகி உடனே மறந்துபோகும். அச்சமயங்களில் நைந்திருந்த சுபாவம் திடீரென்று வெளிப்பட்டு நம்மை வேற்றாளாகக் காண்பிக்கும்.

சிலகாலத்தில் விசேஷமான நற்செய்கை செய்ததாக நம்மை எல்லாரும் புகழுகிறார்கள். நமக்குள் யோசித்துப் பார்க்கும்போதோவெனில், முற்றும் நல்லகருத்தாலேயே செய்துமுடித்ததாக்க் காணப்படவில்லை. உள்ளுக்குள் அப்போது நாணமுண்டாகின்றது. நமது செய்கையின் மனோபாவத்தை ஆராய்ந்துபார்த்தால் எல்லாம் உத்தமமாகக் காணப்படாது. கெட்டகருத்தாலேயும் நல்ல கருமம் செய்வதுண்டு. நற்செய்கையினாலேயே நல்ல எண்ணம் இருப்பதாக நினைப்பது பிசகு. தோன்றும் மனோபாவத்தை விசாரித்துப்பாராமையால் அது மறந்துபோகும். நாளாவர்த்தியில் நமது எண்ணமே நமக்குத் தெரியாமற்போய்விடும். அதை ஏன் அப்படிச் செய்தாய் என்று ஒருவர் கேட்கும்போது ஒன்றும் தெரியாமல் விழிக்கவேண்டியதாக நேரிடும்.

எல்லாவித்தையிலும் தன்னைத்தானறிவதே சிறந்தது. நமது பலாபலம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். புதிதான விஷயத்தைச் செய்யும்படியாகப் பிரயத்தனம்செய்து நிறைவேற்றினால் அப்போது நம்முடைய பலம் இவ்வளவென்று தெரியவரும். நிறைவேறாதுபோனாலும் நம்முடைய சத்தியின் அளவு இன்னதென்று ஏற்படும். அது தெரிந்தால் முடியாதகாரியத்தில் பிரவேசிக்காமலே இருந்துவிடலாம். அதனால் அவமானமில்லை. தன்னுடைய குற்றம் தனக்குத் தெரிந்தால் பிறருடைய குற்றம் பெரிதாகத் தோன்றாது.

## சஹாரா என்னும் வனாந்தரம்.

உலகத்திலுள்ள நாலு கண்டங்களில் ஆபிரிக்கா என்பது ஒன்று. இதின் வடபாகத்தின் மத்தியில் கிழ்மேலாகப் பெரிய வனாந்தரம் உண்டு. அதற்குச் சஹாரா என்று பெயர். அது மேற்கே அட்லாண்டிக்குச் சமுத்திரமுதல் கிழக்கே அரபிக் கடல்மட்டும் பரவியிருக்கும். அதற்குத் தெற்கே இருப்பது சௌதானம் என்கிற நாடு. அது சற்றே வளம்பொருந்திய இடம். இந்தச் சஹாரா வனாந்தரத்திலே மங்கோபார்க்கு முதலிய பிரயாணிகள் பூகோளசாஸ்திர விசாரணைக்காகப் போயிருந்து சுற்றிப்பார்த்துப் புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அதை முழுதும்போய்ப் பார்த்தவர் பார்க்கு என்னும் சாஸ்திரியார். அவர் பிரயாணஞ்செய்ததெல்லாம் சமீபகாலத்திலேதான். அவரால் அநேக சங்கதி தெரியவந்தது. அவருக்குமுன் போயிருந்தவர்கள் அவ்வளவாகப் பார்த்தவர்களாய்த் தோன்றவில்லை. அவ்வனாந்தரத்திலிருக்கிற ஜாதியார் இன்னாரென்றும், அவர்கள் பேசும் பாஷைகள் இப்படிப்பட்டவையென்றும், அவர்கள் குணாகுணங்களும் நடையுடைபாவனைகளும்

இன்னவையென்றும், அவர்களுடைய சன்மார்க்கம் இன்னவிதமானதென்றும், அனுசரிக்கிற சமயம் இன்ன தன்மைத்தென்றும் பார்க்கு என்னும் சாஸ்திரியார் விவரமாகச் சொல்லியிருக்கிறார். அங்கே நடந்துவருகிற வர்த்தகமும், தொழிலும், உண்டாகிற புல்பூண்டுகளும், மரவகைகளும், காணப்படுகிற ஜீவஜந்துக்களும் பூசாரமும் இன்னின்னதென்று அவர் செய்திருக்கிற புஸ்தகத்தால் தெரியவருகின்றது. நாளதுவரையில் ஆபிரிக்காகண்டம் நாகரீகமில்லாத தேசமென்றே கேள்விப்பட்டிருக்கிறோம். அது முற்றும் உண்மையன்று. சஹாராவுக்கும் சௌதானத்துக்கும் நடுவில் திம்பக்தூ என்று ஒரு பெரிய பட்டணமுண்டு. வியாபாரவிஷயத்துக்கு அது மத்தியஸ்தானம். அங்கிருந்து வேறுபட்டணங்களுக்குப் போவதற்கு அநேக வழிகள் பிரியும். வடக்கே சற்று தூரத்தில் நைஜர் என்கிற நதி ஓடுகின்றது. தரைவழியாகவும் வாய்க்கால்வழியாகவும் வியாபாரத்தை விருத்திபண்ணப் போதுமான சாதனம் இருந்துகொண்டிருக்கின்றது. கல்விப்பயிற்சியும் இல்லாமற்போகவில்லை. அன்றியும் அப்பட்டணத்தைச் சுதேசிகள் பரிசுத்தமான திவ்விய க்ஷேத்திரமாகப் பாராட்டிவருகிறார்கள். ஐரோப்பியர் அவ்விடத்துக்குப் போய் முயற்சிசெய்வாரானால் வர்த்தகம் விஸ்தாரமாக விருத்தியாகுமென்றும், சுதேசிகளுக்கும் நாகரீகம் மிகுதியாக உண்டாகுமென்றும் மேலேசொன்ன சாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார்.

தெற்கேயுள்ள சௌதானமென்பது நல்ல தேசமென்று சொன்னோம். அத்தேசத்துக் குடிகளும் ஐரோப்பியரோடு வியாபாரம்செய்ய விருப்பமுடையவர்கள். தற்காலத்திலும் வியாபாரம் நடக்கின்றது. எங்கிலாந்திலிருந்துமாத்திரம் மூன்று கோடிரூபாய் பெறுமான சரக்கு வருஷாவருஷம் ஏற்றுமதியாகும். ஐரோப்பிய வர்த்தகர் தங்கள் சரக்கை ஆபிரிக்காவின் வடக்கிலுள்ள பார்புரிதேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அங்கிருந்து சரக்கை ஒட்டகத்தின்மேலேற்றி அத்திலாசு மலையைக்கடந்து சஹாராவழியாகத் திம்பக்தூவுக்கும் சௌதானத்துக்கும் அனுப்புவார்கள். இதனால் மிகுந்த நஷ்டம் நேரிடும். ஜனங்களும் ஒட்டகங்களும் வனாந்தரத்தில் குடிக்கத் தண்ணீர்கிடையாமல் மாண்டு அடிக்கடிச் சேதம் உண்டாகும். இதனாலேதான் வர்த்தகர்கள், சரக்குகளைச் சேர்த்து, 1,000-ம் 2,000-ம் ஒட்டைகள்மேலேற்றிக்கொண்டு, குடும்பசமேதராய் குடும்பத்திற்குவேண்டிய தட்டுமுட்டுகளும், வளர்க்கிற கோழி, குருவி, புறுக்கள், நாய், பூனை, ஆட்டுக்குட்டி இவைகளுடன் ஒட்டைகளேறி, மொராக்கோபட்டணமுதலிய விடங்களிலிருந்து நைஜர்நதிக்கரைக்குப் பிரயாணம்போகிறார்கள்.

சௌதானத்துக்கு வேறொரு வழியுமுண்டு. ஐரோப்பியர் அட்லாண்டிக்குச் சமுத்திரமார்க்கமாக ஆபிரிக்காவின் மேற்புறத்திற்சேர்ந்து தரைவழியாய்ப் போகலாம். இது சஹாராவழியைப்பார்க்கிலும் சமீபமானது. ஆயினும் இந்த மார்க்கத்தில் பலவிதமான அபாயமுண்டு. வழிமூடிய நாகரீகமில்லாத மிலேச்சதுரைத்தனம். அவர்களால் மிகுந்த துன்பம் நேரிடும். அன்றியும் துஷ்டஜந்துக்கள் வசிக்கிற காட்டிலும் களர்நிலத்திலும் போவதால் உயிர்ச்சேதம் உண்டாகும். இக்காரணங்களால் அந்த மார்க்கமும் ஒத்துவராது.

இனி வேறுமார்க்கம் தேடவேண்டும். சஹாராமுழுதும் பாலைவனமல்ல. அங்குமிங்கும் புல்தரையும் ஜலமும் இருக்கும். அவ்விடங்களின் வழியாக வியாபா

ரிகள் பிரயாணம்செய்வார்கள். அப்பசுந்தரைகளைப்பற்றியே பத்துலக்ஷம் ஜனங்கள் ஜீவித்திருக்கிறார்கள். அப்பசுந்தரைகளுக்குச் சமீபத்திலிருக்கிற வனம்மாத்திரம் பிரயாணிகளுக்குத் தெரியும். வனத்துக்கு நடுவில் ஒருவரும் போவதில்லை. அதின் விவரமும் தெரியாது.

சஹாராவுக்கும் மத்தியதரைக்கடலுக்கும் நடுவில் ஆல்ஜீயர் என்ற ஒரு மாகாணமுண்டு. அதைப் பிரான்சுக்காரர் அளந்தபோது அது மேட்டுப்பூமியென்றும் சஹாரா பள்ளத்தாக்கென்றும் தெரியவந்தது. அது உண்மையானால் ஆதியில் மத்திய தரைக் கடல் ஆல்ஜீயர் தேசத்தின்வழியாகச் சஹாராவுக்குப் போயிருக்கவேண்டும். சஹாராவும் கடலாயிருந்திருக்கவேண்டும். ஆல்ஜீயர்தேசத்தில் ஜலம்போன வாய்க்கால் தூர்ந்துபோனதால் சஹாராநீர் வரவில்லாமல் வற்றிப் பாலைவனமாக மாறிப்போய் விட்டது. புதிதாக வாய்க்கால் வெட்டித் திறந்துவிட்டால் மத்தியதரைக்கடலின் ஜலம்பாய்ந்து சஹாரா முன்போலக் குடாக்கடலாகிவிடும். இதை யோசித்துப் பிரான்சு துரைத்தனத்தார் பணச்செலவுசெய்து முடிக்கவேண்டுமென்று எத்தனம் செய்தார்கள். செலவுக்கு எண்பதுலக்ஷம் ரூபாய் தேவையாயிருந்தது. எடுத்தகாரியம் முடியுமோவென்று ஐயமும் உண்டாயிற்று. ஆகவே மனந்தளர்ந்து பின்னிடைந்தார்கள்.

அங்கிலேயர் ஒருவர் வேறுவழி கண்டுபிடித்திருக்கிறார். சஹாராவில் மத்தியதரைக்கடலன்று. பாய்ந்து தூர்ந்தது அட்லாண்டிக்குச் சமுத்திரம் வடமேற்குவழியாகப் பாய்ந்திருந்ததாகவும், வழி தூர்ந்துபோயிருப்பதால் சஹாரா வனாந்தரமாக மாறிப்போனதாகவும் ஊகிக்கிறார். அவர் சொல்லுகிறபடி பெல்டாநதியின் முகத்துவாரம்முதல் திம்பக்தூவுக்கு ஐம்பதுமயில்வரைக்கும் கடல்பெருகியிருக்கவேண்டும். இந்த இடத்தைப்பார்த்து கவனமாய்ச் சோதித்திருக்கிறார். அவர் செய்த அளவின்படி அது பள்ளத்தாக்காகவே காண்கின்றது. அரபிகள் சொல்லும் பெயரும் அந்தப் பொருளையே குறிக்கின்றது. தவிரவும் அட்லாண்டிக்குச் சமுத்திரத்தில் அகப்படுகிற கல்வகைகளும் சிப்பிகளும் அங்கேயும் காணப்படுகின்றன. கடலுப்பும் பூமியில் பற்றியிருக்கின்றது. பெல்டாநதியின் முகத்துவாரத்தில் இருக்கிற மணல்மேட்டை எடுத்துவிட்டால் சமுத்திரம் தாராளமாகப் பள்ளத்தாக்கில் பாயும். அந்தப் பள்ளத்தில் செடியாவது பிராணிகளாவது காணவில்லை. அதைச் சுற்றி மேட்டுப்பாங்கான நிலமிருக்கிறது. அதன்மேல் முப்பதுபட்டணம்வரைக்கும் உண்டு. பள்ளத்தில் ஜலம்பாய்ந்து கடலானால் வியாபாரத்துக்கு வசதியாக இருக்கும். கப்பல் திம்பக்தூவுக்குச் சமீபத்தில்போகும். சௌதானத்திலிருந்து பருத்தி, அவிரி, தானியம், மரஎண்ணெய், பிசின், காப்பிக்கொட்டை, யானைத்தந்தம் முதலிய சரக்குகள் ஏற்றுமதியாகும். ஐரோப்பியர் சரக்குகள் அங்கே விலைபோகும். இவ்வாறாக வியாபாரிகளுக்கும் ஜனங்களுக்கும் லாபகரமாகமுடியும்.

இந்த மார்க்கம் சாத்தியமாகுமாவென்று அளந்துபார்ப்பதற்குத் தேவையான திரவியசகாயம்செய்ய அங்கிலேய துரைத்தனத்தார் எத்தனம்செய்கிறார்கள். இப்பெரும் பிரயத்தனம் நிறைவேறினால் லோகோபகாரமாய் இருக்கும் என்பதற்கு ஐயமில்லை; சாத்தியமாகுமாவென்பது பின்னிட்டுத் தெரியவேண்டும்.

## தக்காணத்துப் பூர்வகதைகள்.

மூன்று வல்லவர்கள் வேதாளங்களை வென்ற கதை.

ஒரு தேசத்தில் தனிகன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி போல் அழகுள்ள பெண் எங்குமில்லை. அவனுக்கு அறுபது நாழிகையும் இலக்குவைத்து பாணம்போட்டடிப்பதைவிட வேறு உற்சாகமான காரியமொன்றுங் கிடையாது. அம்புபோடுவதில் அவனைப்பார்க்க வல்லவனேயில்லை அவன் தினந்தப்பாமல் காலையில் தன் மனையாள் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றை, அவள்மேற் சிறிதும் காயம்படாமல், அடித்துவந்தான். இப்படியிருக்க, ஒருநாள் அவன் மைத்துனன் தன் தங்கையைப் பிறந்த அகத்திற்கு அழைத்துக்கொண்டுபோக வருகையில் தங்கையைப் பார்த்து: குழந்தாய், நீ ஏன் வெளுத்து இளைத்து விசனமடைந்தவளாயிருக்கிறாய்? உன் நாயகன் உன்னிடத்தில் பக்ஷமாயிருக்கவில்லையா? வேறேதாவது விசேஷமுண்டா? என்று கேட்க, அவள்: அப்படிப்பட்ட குறை எனக்கு ஒன்றுமில்லை. தினந்தோறும் என் பிராணநாயகர் என் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றை இலக்குவைத்து அடித்து விளையாடிக்கொண்டிருக்கிறார். என்றையதினம் இலக்ஷியம்தப்பி அவர் போடுகிற பாணம் என்மேல் படுமோவென்று எப்போதும் நடுநடுங்கிக்கொண்டேயிருக்கிறேன். அந்தச்செய்கை அவருக்கு விசேஷமாய்க் களிப்புண்டாக்குவதனால் வேண்டாமென்று அதை மறுக்கக்கூடவில்லை. அவர் தாமாகவே அதை விட்டுவிடுவாரானால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும் என்று சொன்னதைக் கேட்டு அவன்: அதைப்பற்றி அவர் ஏதாவது உன்னுடன் சொல்வதுண்டோ என்றான். அதற்கு அவள்: நாள்தோறும் இவ்வாறு அடித்தவுடனே அவர் தனக்குச்சரியாய் ஒருவருமில்லையென்று சந்தோஷமாய் முகமலர்ந்து என்னண்டைவந்து, "என் அருமைநாயகியே! என்னைப்போல் சமர்த்தன் யாராவது உண்டோவென்று கேட்பார்." நான் இப்படிப்பட்டவன் ஜகத்திலேயே கிடையாதென்று நினைக்கிறேனென்று பதில் சொல்லுவேனென்று சொல்ல, அவள் சகோதரன்: இனிமேல் நீ அப்படிச் சொல்லவேண்டாம். நாளையதினம் வந்துகேட்டால், உன்னைவிட வல்லவர் பதினாயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சொல் என்றான். அவன் புத்திசொன்னபடியே அவள் மறுநாள் தன் கணவன்வந்து கேட்டபோது உன்னைவிடச் சமர்த்தர்கள் எத்தனையோபேர்களுண்டு என்றாள்; அதைக் கேட்க அவனுக்குப் பொறாமல், அப்படியானால், அப்படிப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்களோ போய்ப் பார்த்துவரவேண்டுமென்று

போாவல்கொண்டு அவளை விட்டுவிட்டுச் சீமைசுற்றப் புறப்பட்டான்.

இவ்வாறு அந்த முத்துக்குறியடிப்போன் வீடுவிட்டுப் புறப்பட்டு வெகுதூரம்யாத்திரைசெய்தபிறகு, ஒருநாள் ஒரு ஆற்றங்கரையைப் போய்ச்சேர்ந்தான். அங்கே மற்றொரு பாதைசாரிவந்து உட்காந்து போஜனம்செய்துகொண்டிருந்தான். முத்துக்குறியடிப்போன், அவன்பக்கத்தில்போய் உட்கார்ந்து கொஞ்சநேரம் யோகக்ஷேமம் வினவிக்கொண்டிருந்து பிறகு, நீர் யாத்திரைசெய்வதற்குக்காரணமென்ன? எங்கேபோகிறீர் என்று கேட்க, அந்தப் பாதைசாரி: நான் ஒரு மல்லன்; இவ்வுலகத்திற்கெல்லாம் நானொருவனே பலசாலி; மல்லயுத்தஞ்செய்வதிலும், ஒருவரும் எடுக்கமாட்டாத சுமையை எடுப்பதிலும் வெகு விநோதச்செய்கைகள் செய்துகாட்டுவேன். நமக்குச் சமானம் இவ்வுலகில் வேறொருவருமில்லையென்று நான் நெடுநாளாய் நினைத்து அகங்காரங்கொண்டிருந்தேன். சிலநாளைக்கு முன், வெகுதூரதேசத்தில் மகாவல்லவர் ஒருவரிருப்பதாயும், அவர் தன் மனையாளுக்குச் சிறிதும் காயம்படாமல் அவள் மூக்குத்தி முத்துக்களில் ஒன்றைக் குறிவைத்தடிப்பதாயும் சொல்லக்கேட்டு, அப்படியொருவரிருந்தால் அவர் உலகத்தில் யாவரும் ஆச்சரியப்படத்தக்கவராயிருக்கவேண்டுமென்று அவரைத் தேடிப் பார்க்கும்படி புறப்பட்டேனென்றான். அதைக் கேட்டவுடனே முத்துக்குறியடிப்போன்: அப்படியா! ஆனால் நீர் உமது யாத்திரையை இவ்வளவோடு நிறுத்தலாம். நீர் கேள்விப்பட்ட மனிதன் நானே என்று சொல்ல, அந்த மல்லன்: ஆயின் உமக்கு என்னகுறை? நீர் யாத்திரையாய்வந்த விதமென்ன? நீர் எவ்விடத்துக்குப் போகிறீர் என்றான். அதற்கு அவன்: நம்மையும்விடச் சமர்த்தன் எங்கேயாவது உண்டோ என்னவோ பார்க்கவேண்டுமென்று புறப்பட்டேனெனவே, அவ்விருவரும் சகோதரர்கள் போல் பாவித்துத் தங்களைவிட வல்லவர் எங்கேயாவது இருந்தால் பார்த்துவரலாமென்று அவ்விடம்விட்டுப் பயணப்பட்டார்கள்.

அவ்விடம் விட்டுக் கொஞ்சதூரம் போனபின்பு நாலுவழியும் ஒன்றுகூடுகிற ஒரு இடத்தில் போய் இறங்கினார்கள். அங்கே இவர்கள் ஒருநாளும் பாராத புதுமனிதன் ஒருவன் முன்னமே வந்து இறங்கியிருந்தான். அந்தத் தேசாந்தரி இவ்விருவரையுங் கண்டு, நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்? என் நேசர்களே! என்று கேட்க: அவர்கள், நாங்களிருவரும் விசேஷ சாமர்த்தியமுடையவர்கள், எங்களைவிடச் சமர்த்தர் எங்கேயாவது இருந்தால் காணலாமென்று யாத்திரையாய்வந்தோம். நீர் யாரோ, எங்கிருந்து வருகிறீரோ தெரியவில்லையே? என்றார்கள். அதற்கு அவன்: சிறந்த புத்தி யுக்தி, ஆலோசனை, ஞாபகசக்தி முதலானவையெல்லாம் ஒன்றாய்க் குடிகொண்ட மேலான பண்டிதன் நான்; என்னைவிட விநோதமான

மனிதன் இந்த லோகத்தில் எங்குமில்லையென்று உண்மையாய் நம்பியிருந்தேன். இப்போ சிலநாளைக்குமுன்னே வெகுதூரதேசத்தில் அதிகமான சாமர்த்தியமுள்ளவர்கள் இருவர் இருக்கிறார்களென்று கேள்விப்பட்டேன். அவர்களுள் ஒருவர் மல்லராம்; அவர் வலிமைக்கு ஈடான வலிமை இந்த ஜகத்திலேயே இல்லையாம். மற்றொருவர் தன் மனையாள் மூக்கிலிருக்கிற மூக்குத்தி முத்துக்களில் ஒன்றைக் குறிவைத்து அடிக்க வல்லவராம். அது உண்மையானால் அறிந்துவரலாம் என்று போய்க்கொண்டிருக்கிறேன் என்று சொல்லவே, அவர்கள்: ஓ பண்டிதரே! நீர் கேள்விப்பட்டது உண்மைதான்; அவ்விருவரும் நாங்களே என்றார்கள். அதைக் கேட்டவுடனே அந்தப் பண்டிதன் பேராநந்தமடைந்து, அப்படியானால் நாம் மூவரும் ஒரேவிதமான எண்ணங்கொண்டு சீமை சுற்றத் தலைப்பட்டவர்கள் ஆதலால் சகோதரர்கள்போலிருப்போம். உங்கள் தேசம் வெகுதூரத்திலிருப்பதுபோல் காண்கிறது. என் வீடு சமீபத்திலிருப்பதனால் மூவரும் அங்கே போயிருந்து நமது விசேஷ சாமர்த்தியங்களையெல்லாம் பரீக்ஷைசெய்வோம் வாருங்கள் என்றான். அவ்விருவரும் அதற்குச் சம்மதித்து அந்தப் பண்டிதனுடன் சென்று அவன் வீட்டிற்போயிருந்தார்கள்.

அந்த வீட்டு மடைப்பள்ளியில் 20, 30 பேர் சேர்ந்தாலும் அசைக்கமாளாத இருப்புக்கொப்பரை ஒன்றுண்டு. மல்லன் அன்று ராத்திரி வெடியநேரத்திலெழுந்து தன் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவதற்காக மடைப்பள்ளிக்குச் சென்று அந்தக் கொப்பரையைத் தூக்கித் தோள்மேலெடுத்து வைத்துக்கொண்டுபோய்ச் சமீபத்திலிருந்த ஆற்றின் நடுவே புதைத்துவிட்டு ஒன்றுமறியாதவன் போல் வந்து முன்போலவே முத்துக்குறியடிப்போன் பக்கத்தில் படுத்துக் கம்பளத்தைப் போர்த்துக்கொண்டான். அந்த வீட்டுப் பண்டிதன் மனைவி தன் புருஷனை எழுப்பி, என்னவோ மெதுவாய்க் காலடியோசை கேட்கிறது; எவனோ காலடியோசை தெரியாமலிருக்கவேண்டுமென்று மெதுவாய் நடந்துபோகிறான்; கொஞ்ச நேரத்துக்குமுன்னேயும் இப்படியே கேட்டது; ஒருவேளை திருடனாயிருந்தாலும் இருக்கலாம் என்று சொல்லவே, அவனும் எழுந்து முழுதும் சுற்றிப்பார்த்தான். ஒருவரும் தென்படவில்லை. வீட்டிலெல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தன. கடைசியாய் அடுப்பங்கரையண்டைபோய்ப் பார்க்கையில் வீட்டுக்காரி, ஐயோ! கொப்பரையெங்கேயென்று கூவினாள். அதைக்கேட்டுப் பண்டிதன் திடுக்கிட்டு: நான் கொப்பரையைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கவேயில்லை. அதை எத்தனைபேர் சேர்ந்தாலும் அசைக்கமாளாதே; அதை எடுக்க எமன்தானே வரவேண்டும் என்றான். வீடெங்குந்தேடியும் அந்தக் கொப்பரை அகப்படவில்லை. முழுதும் தேடியபின் மடைப்பள்ளியண்டை ஓர் புதிய அடிச்சுவடுகண்டு, அதைப் பிடித்துக்கொண்

டுபோனூர்கள். அது அந்த ஆற்றங்கரையண்டை கொண்டுவிட்டது. அப்புறம் அந்த அடி தொடர்ந்துபோகாமையால் அந்தப் பண்டிதன்: தன் மனைவியைப்பார்த்து, எவனோ மகா பலிஷ்டனான ஒருவனே அதைத் தூக்கிக்கொண்டுவந்து இந்த ஆற்றில் புதைத்திருக்கிறான்; ஏனெனில் ஒரேகாலடிதான் தென்படுகிறது. இதற்கு அப்பால் அடிகள் ஒன்றையும் காணேன்; அது யாரோ தெரியவில்லையே! நல்லது நமது வீட்டுவிருந்தாளிகள் தூங்கிக்கொண்டிருக்கிறார்களா. பார்ப்போம்; மல்லன் ஒருவனே இக்காரியம் செய்தாலும் செய்திருக்கலாம் என்று சொல்லி வீட்டிற்குப் போய்ப் பார்த்தான். அங்கே அவ்விருவரும் தூங்கக்கண்டு, முதவில் முத்துக்குறியடிப்போனை நிதானித்துப் பார்த்தான்; அவனல்லவென்று நன்றாய்த் தெரியவந்தது. பின்பு மல்லனண்டை வந்து சூதுகளெல்லாம் நன்றாய் அறிந்த புத்திசாலியான அந்தப் பண்டிதன் அவனை நக்கிப்பார்த்து அவன்தானென்று அறிந்துகொண்டு, தன் மனைவியைநோக்கிப் புன்சிரிப்புடன், நமது கொப்பரையைத் திருடி ஆற்றிற்புதைத்த திருடர் இதோயிருக்கிறார். இவர் உடம்பில் உள்ளங்கால்முதல் கழுத்துவரையில் உப்புரசம் சிறிதுமில்லாமையால் ஜலத்தில் மூழ்கிவந்து படுத்தவராயிருக்கவேண்டும். நல்லது, இச்செய்தியை நான் அறிந்துகொண்டதை இவருக்குக் குறிப்பாய்க் காட்டிக் காலையில் இவரைப் பிரமிக்கச்செய்கிறேன் என்று சொல்லிவிட்டு அவளுடன் படுக்கையறைபோய்ச் சேர்ந்தான்.

காலையில் முத்துக்குறியடிப்போனும் மல்லனும் எழுந்து வரக்கண்டு, பண்டிதன்: இன்றையதினம் நாம் ஸ்நானம்பண்ண ஆற்றுக்குத்தான் போகவேண்டும்; வாருங்கள்; வீட்டில் ஸ்நானம்பண்ணுவதற்காக வைத்திருந்த பாத்திரத்தை ராத்திரி எவனோ திருடிக்கொண்டுபோயினான் என்றான். அதற்கு மல்லன்: அந்தக் கொப்பரை எங்கேபோயிருக்கலாமென்று கேட்க, பண்டிதன்: அது எனக்கு எப்படித் தெரியும் என்றுசொல்லி, அவர்களை ஆற்றிற்கு அழைத்துக்கொண்டுபோய் நீரில் கொஞ்சநேரம் இங்குமங்கும் திரிந்து பின்பு அந்தப் பாத்திரம் இருக்கும் இடத்திற்குப்போய், நமது கொப்பரை இதோ இருக்கிறதே! இது எவ்வளவுதூரம் ஓடிவந்து விட்டது பார்த்தீர்களா நேசர்களே! என்றான். மல்லன்: தான் கொப்பரையைப் புதைத்தவிடத்தைப் பண்டிதன் அறிந்துகொண்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, யார் இங்கே கொண்டுவந்து புதைத்திருப்பார்கள்? என்று ஒன்றும் அறியாதவன்போல் கேட்டான். அதற்குப் பண்டிதன்: ஏன், நீர்தான் புதைத்திருக்கலாகாதா? என்று சொல்லி, ராத்திரிநடந்த செய்தியையெல்லாம் உள்ளபடியே வெளியிட்டான். இவ்விருவர்களுடைய வல்லமையையும் காணவே முத்துக்குறியடிப்போனுக்கு இவர்கள்முன் நாம் எவ்வள

வென்று தோன்றிற்று. பின்பு மூன்றுவல்லவர்களும் வீட்டுக்குப் போய் அன்றையதினத்தை வெகுவிநோதமாய்ப் போக்கினார்கள்.

மறுநாள் பண்டிதன் மல்லனைப்பார்த்து: நாம் தினமாய்ப் புஜிக்கிற போஜனம் இருக்கட்டும்; இன்றையதினம் ராஜபோஜனமாய்ப் புஜிப்போம். ஓ மகாபலிஷ்டரான என் நண்பரே! அதோ குன்றின் மேல் மேய்கின்றனவே; அந்த ஆடுகளில் மிகவும் கொழுத்ததாய்ப் பார்த்து ஒன்று பிடித்துக்கொண்டுவருகிறீரா? அதை இன்றைய தினம் உபயோகிக்கலாமென்ன, மல்லன்: அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டு அந்த ஆட்டுமந்தையண்டை போகையில், ஒரு கேடுகெட்ட வேதாளம் அவன் கருத்தறிந்து, இவன் நம்மை வீட்டுக்குக் கொண்டுபோம்படி செய்தால் அங்கேபோய் வேடிக்கை பண்ணலாம் என்று எண்ணி, நேர்த்தியான ஒரு ஆடாகமாறிற்று. அதைப்பார்க்கவே மல்லன், இதைவிடச் சிறந்தது வேறொன்றும் இல்லையென்று அதையெடுத்துக் கையால் அணைத்துக்கொண்டு வீட்டுக்குப்போகப் புறப்பட்டான். அது சாதாரணமான ஆடுகளைப்போல் இராமல் பலமாய் உதைத்து எழும்பி இடிக்க ஆரம்பித்தது. மல்லன் அவைகள் ஒன்றையும் லக்ஷியம்செய்யாமல் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான். பண்டிதன் அவன் வருவதைக்கேட்டு எதிர்கொண்டு ஓடிவந்தான். மல்லன் இறுக்கிக் கட்டிக்கொண்டிருப்பதனால் அந்த ஆடு கண் பிண்டை பிதுங்கிப்போய் அதிக பயங்கரமாயிருந்தது. அதைப் பார்க்கவே பண்டிதன்: இது ஆடன்று; ஒரு வேதாளம் என்று உடனே அறிந்துகொண்டு, நாம் இதைப்பார்த்து பயந்ததாய்க் காட்டினால், இந்த வேதாளம் உள்ளேபுகுந்து யாவரையுங் கொன்று தின்றுவிடும். ஆதலால் இதைப் பயமுறுத்தவேண்டும் என்று எண்ணி, தைரியமாய் உரத்தகுரலோடு, ஆகா, மல்லரே! மல்லரே!! மதிகெட்ட நேசரே! என்னகாரியஞ் செய்தீர்! கொழுத்ததாய்ப் பார்த்து ஒரு ஆடல்லவா பிடித்துக்கொண்டுவரச் சொன்னது! அப்படியிருக்க, உபயோகமற்ற ஒரு சிறுவேதாளத்தைப் பிடித்துவந்தீரே! ஆடுகள் அகப்படாவிட்டால் இன்னும் ஒரு பத்து வேதாளமாவது பிடித்துவரலாகாதா? இங்கே யாவரும் பசியால் தவிக்கிறார்களே; இது என் பிள்ளைகளின் கடைவாய்ப் பல்லுக்காவது காணுமா? அவர்கள் ஒவ்வொருவரும் கொழுத்துப்பருத்த ஒவ்வொரு வேதாளந் தின்பார்களே; என் மனைவி மூன்றுதின்பாள், நான் பனிரண்டு தின்பேனே; இதைக்கொண்டு நாம் என்னசெய்கிறது என்று சொல்லவே, மல்லன் இதென்னவென்று திகைத்துப்போயினான். வேதாளம் மிகவும் பயந்துபோய் முழங்காலிட்டு நகர்ந்துவந்து: ஓ என் பிராணநாதரே! என்னைத் தின்றுவிடாமல் பிழைப்பூட்டுங்கள்; உங்களுக்கு இவ்வுலகத்திலுள்ள பொருள் எது வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுக்கிறேன். கொஞ்சம்

வெளியே போவதற்குமாத்திரம் எனக்குச் செலவுகொடுப்பீர்களானால் உடனே அளவற்ற ஐசுவரியம் கொண்டுவந்து உங்கள் வீட்டில் நிரப்புகிறேன். என்னைத் தின்னாமலிருக்கிறீர்களா! என்னை விட்டுவிடுகிறீர்களா! என்று பலவாறு வேண்டிக்கொண்டது. அதற்குப் பண்டிதன்: அட, பேதையே! அது எங்கேயாவது நடக்குமா! இப்போது நான் விட்டுவிடுவேனானால் பின்பு நீ செய்யப்போகிறது எனக்குத் தெரியாதா! இப்போது தப்பித்துக்கொண்டையானால் மறுபடி நீ இந்தத்திக்கு நோக்குவாயா! எங்களுக்கு வச்சிரமும் வேண்டாம்; வைடூரியமும் வேண்டாம். நாளைவருகிற பலாப்பழத்தைவிட இன்றுவருகிற களாப்பழம் சிறந்ததென்று கேள்விப்பட்டதில்லையா? நாங்கள் பசியால் தவிக்கிறோம். இந்த வேளைக்கு நல்லதாய்ப் போஜனமகப்பட்டால் அதைவிட மேலானதொன்றுமில்லை. உன்னை விடமாட்டோம் என்றான். அவன் அவ்வளவு தைரியத்துடன் பயமின்றி சகஜமாய்ப் பேசவே, அவன் சொல்வதெல்லாம் மெய்யென்று அறிந்து அந்த வேதாளம், அதிக வணக்கத்துடன், ஓ சுவாமி! அப்படியில்லை; சத்தியமாய்ச் சொல்லுகிறேன்: அடியேனுக்கு வெளியேபோகமாத்திரம் கொஞ்சஞ் செலவுகொடுங்கள்; உங்களுக்கு இஷ்டமான பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு அவசியம் உடனே ஓடிவருகிறேன் என்று வாக்குத்தத்தஞ்செய்தது. பிறகு பண்டிதன் அதிகம்பீரத்துடன், நல்லது நீ போய்வா; நீ வாக்குத்தத்தஞ்செய்தபடி அளவற்ற பொருள்களோடு உடனே திரும்பிவாராமல் போவாயானால், உன்னை எப்படியாவது நாங்கள் கண்டுபிடித்துத் தின்றுபோடுவோம்; நீயாகட்டும், உன் இனத்தாராகட்டும் ஒருவரும் எங்களுக்கு ஈடன்று என்று சொல்லி அதற்குப் போகச் செலவுகொடுத்தான்.

மல்லனுடைய வலிமையையும் பண்டிதனுக்கு வேதாள போஜனத்திலிருக்கிற அதிக விருப்பத்தையும் பார்க்கவே, அந்த வேதாளம்: நாம் அவர் கையினின்றுந் தப்பித்துக்கொண்டது நமது அதிர்ஷ்ட விசேஷந்தான் என்று சந்தோஷமடைந்து, துரிதமாய்த் தன்னிடத்திற்கு ஓடித் தங்கள் நிதியிலிருந்து விலையற்ற பொருள்களை விசேஷமாய் வாரிக்கொண்டு தன் உயிரைத் தப்புவித்துக்கொள்ளும்படி தன் சக்திக்கு விஞ்சின வேகத்துடன் பண்டிதன்வீட்டிற்குத் திரும்பிவந்தது. வழியில் அதற்கு இனமான வேதாளங்கள் அநேகங்கண்டு கோபம் விஞ்சி, நமது பொருள்களையெல்லாம் எங்கே நீ வாரிக்கொண்டுபோகிறாய் என்று கேட்க, அந்த வேதாளம்: என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கொண்டு போகிறேன்; நான் உல்லாசமாய்ச் சீமைசுற்றிக்கொண்டிருக்கையில் ஒருநாள், அதிபயங்கரமான சில பலிஷ்டர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு, பொருள்கொண்டுவந்து கொடாவிட்டால்,

என்னைத்தின்றுபோடுவதாய்ப் பயமுறுத்தினார்கள் என்று உத்தரஞ் சொல்லிற்று. மற்றவைகள் அதைக் கேட்டு, அப்படியானால் நாங்கள் அவர்களைப் பார்க்கவேண்டும்; வேதாளங்களை மனிதர்கள் தின்பார்கள் என்று நாங்கள் இதுவரையில் எங்கும் கேள்விப் பட்டதில்லையென்று சொன்னதற்கு, அந்த வேதாளம்: அவர்கள் சாதாரணமான மனிதர்களைப்போலல்ல; உலகத்தில் அவர்களைப்போல் பயங்கரமான ஜந்துவை நானெங்குங் கண்டதில்லை. சமயம் நேர்ந்தால் நமது ராஜாவைக்கூடப் பட்சித்துப்போடுவார்கள். அவர்களுள் ஒருவர், தாம் நாள்தோறும் பனிரண்டு வேதாளங்கள் புஜிப்பதாயும், தம் மனையாள் மூன்று புஜிப்பதாயும், தம் மக்கள் ஒவ்வொன்று புஜிப்பதாயும் சொன்னாரென்று சொல்லவே, அவை அன்றையதினம் தடுக்காமல் அதற்குப் போக வழிவிட்டன. அந்தச் செய்திகேட்டு வேதாளராஜனும்: நாளையதினம் இதைப்பற்றிச் சபைகூடிப் பேசவேண்டும்; அத்தருணத்தில் அவசியம் மனிதனுக்கு ஊழியஞ்செய்கிற அந்த வேதாளம் வந்து சேரவேண்டுமென்று கட்டளையிட்டது. அப்படியே ஆகட்டுமென்று அந்தச் சிறுவேதாளம் செலவுபெற்றுக்கொண்டு பண்டிதன்வீடுவந்து சேர்ந்தது. (இன்னும் வரும்.)

## வீண்வாதஞ்செய்பவர்.

உலகத்தில் விபரீதமான எண்ணங்கொண்டு எடுத்ததற்கெல்லாம் ஆக்ஷேபம் செய்வதையே விரதமாக அநேகர் அனுசரித்துவருகிறார்கள். இவ்வாறு ஆக்ஷேபம் செய்கிறவர்களுக்குள் பல வகுப்பார் உண்டு. அவர்கள் மனதில் தோன்றும் விபரீத வேறுபாடுகளுக்குக் கேட்போர் தாமதமின்றி ஒத்துக்கொள்வதினாலேயே அவர்கள் திருப்தி அடைகிறதில்லை. விசாரணைசெய்து உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் தர்க்கிப்பதில்லை. எதிர்வாதம் செய்கிறவர்களைத் தோல்வியடையப்பண்ணித் தாம் வெற்றி அடைகிறதே அவர்கள் கருத்து. அவர்கள் பேசுவதற்கெல்லாம் ஆக்ஷேபம்செய்யாமல் ஒத்துக்கொள்ளினும் மகிழ்ச்சி அடையார்கள். ஜனோபகாரமான ஏற்பாடுகளை முன்னிட்டுக் காலத்துக்குக்காலம் கூடிப் பேசும் சபையார்களில் வீண்தர்க்கம் செய்வதற்கென்றே சிலர் கங்கணங்கட்டிக் கொண்டுவந்து சேருவார்கள். சபைகூடியபின்பு கைவிடத்தகுந்த விஷயத்தை அனுசரிக்கவேண்டுமென்றும், அனுசரிக்கத்தகுந்த விஷயத்தைக் கைவிடவேண்டுமென்றும் வாதாடிக் காலங்கழிப்பார்கள். ஜனங்கள் அனுசரித்துவருகிற வழக்கத்தின் குணகுணங்களைச் சீர்தூக்கிப்பாராமல் புது ஏற்பாட்டுக்கே போராடுவது அவர்கள் இயல்பாயிருக்கின்றது. இவ்வாறு துர்விவாதம்செய்வது பெரிய குற்றமன்று. உசிதமல்லாத வார்த்தைகளைப்பேசி எதிர்வாதம் செய்கிறவர்களைத் தூஷிப்பது விவேகிகளுக்கு அழகன்று. நியாயமான விஷயங்களுக்கெல்லாம் இயல்பாகத்

துர் ஆக்ஷேபம் செய்வதால் கண்ணியக்குறைவென்று அவர்கள் மனதில் தோன்றுவதில்லை. நாலுபேரும் சான்றோர்கட்டளையின்படி அனுஷ்டித்துவரும் விதிகளைத் தாம் அனுசரிப்பது இல்லையென்று பெருமைபாராட்டி மற்றவர்கள் அனுசரிப்பதெல்லாம் தற்பொழிவின்பொருட்டென்று அவர்களை தூஷித்துத் திரிவார்கள். எது எப்படி ஆயினும் சொன்னதற்கெல்லாம் ஆக்ஷேபஞ்செய்வதே அவர்கள்கொண்ட கொள்கை.

குதர்க்கம்செய்வது நல்லதல்லவாயினும், அதினால் சொற்பபிரயோஜனமும் உண்டு. சகல விஷயங்களும் தாமே விருத்தியடைந்து வளராவண்ணம் சிறிது காலம் அவைகளைத் தடுத்தபோதிலும் துராக்ஷேபத்தால் ஆராய்ந்து தெளியவேண்டியதாக நேரிடும். ஆக்ஷேபசமாதானத்தால் முன்தோன்றாத சில குறிப்புகள் பின்னிட்டுத் தெரியவரும். உலகத்தில் நாளதுவரைக்கும் நடந்தேறிய சங்கதிகளை யோசித்துப்பார்ப்போமானால் எதிர்வாதஞ்செய்து குற்றங்களை எடுத்துக்காட்டுகிறவர்கள் இல்லாமையால் சில காலங்களில் புத்தியீனமான ஏற்பாடுகள் உண்டானதாகவும், அவற்றால் கணக்கில்லாத தீமை விளைந்திருப்பதாகவும் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். இக்காரணத்தினாலேயே பிராஞ்சுதேசத்தில் மகா கலகம் உண்டானதாகச் சொல்லுகிறார்கள். அக்காலத்தில் சிலர் பித்தம்பிடித்தவர்களைப்போல் விபரீதமான எண்ணங்கொண்டு சமாதானத்தைக் குலைத்துப் பழைய ஏற்பாடுகள் யாவற்றையும் தலைதடுமாறச்செய்து பள்ளம் மேடாகவும், மேடு பள்ளமாகவும் நிலைகுலைந்துபோகும்படி குடிகளை ஏவிவிட்டார்கள். சீமையில் பழையசட்டங்களைக் காலத்துக்குத்தக்கபடி மாற்றவும், புதியசட்டங்களை உண்டாக்கவும் ஒரு சபை ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சபையில் ஒரு வகுப்பார் புதிய ஏற்பாடுகளில் உள்ள தூஷணங்களைக் கண்டு தெரிவிப்பவர்கள். அவர்கள் அப்போதைக்கப்போது உண்டாகும் சட்டதிட்டங்களின் குறைகுணங்களைத் தெரிந்து ஆக்ஷேபம்செய்ய, அதற்கு மற்றவகுப்பார் சமாதானஞ்சொல்ல, இவ்வாறு இருவகுப்பாரும் ஒருமித்து யாதாமொருகாரியத்தைத் தொடங்குவார்கள். ஆக்ஷேபஞ்செய்வதால் சிறிது காலதாமசம் உண்டானபோதிலும் பெரிதல்ல. குற்றம் இன்னதென்று விசாரணையால் தெளிந்து அதற்குத்தக்க பரிகாரம் செய்ய முயலுவது பெருத்தகாரியம். இந்த ஏற்பாடு கெட்டதென்று ஒருவரும் சொல்லார். ஆயினுங் கேட்போர் நகைக்கும்படியான விபரீத எண்ணங்களைக் கொள்ளுவதும் அவற்றை வெளியிடுவதும் யாவரும் அனுசரிக்கவேண்டுமென்று வாதிப்பதும் நல்லதல்ல. சிலருக்கு அது சுபாவமாக இருக்கின்றது.

40 வருஷத்திற்குமுன்பாக சீமையில் இருப்புப்பாதை போடவேண்டுமென்று பிரயத்தனஞ்செய்தார்கள். துராக்ஷேபஞ்செய்பவர்களுக்கு அது நல்ல சமயம். புகைவண்டியால் உண்டாகும் சத்தத்தினால் பாதைக்கு அருகில் புலங்களில் மேய்ந்துதிரிகிற ஆடுமாடுகள் கலைந்தோடிப்போகுமென்றும், அதனால் குடிகளுக்கு நஷ்டம் உண்டாகுமென்றும் சிலர் ஆக்ஷேபஞ்செய்தார்கள். குடிகளுக்கு நஷ்டம் நேரிடாவண்ணம் பாதுகாப்பது துரைத்தனத்தாருடைய பொறுத்த கடமையாதலால், மேற்சொன்ன ஆக்ஷேபத்தை மிகப் பெரிதாக நம்பியிருந்தார்கள். அன்றியும் புகைவண்டிகள் ஓடும்போதெல்லாம் சவாரிகுதிரைகள் வெருண்டு பாதையைவிட்டு ஓடிப்போகுமென்றும், அவைகளை வளர்த்துவருகிற வழக்கம்

விட்டுப்போகுமென்றும், சண்டைக்காலங்களில் போதுமான குதிரைகள் அகப்படா வென்றும், குதிரைவியாபாரம் அடியோடு தொலைந்துபோகுமென்றும் வேறு சிலர் ஆக்ஷேபஞ்செய்தார்கள். புகைவண்டிகள் ஏற்படுமானால் கிராமத்திலுள்ளவர்கள் பட்டணத்திற்குப் போய் வேண்டும் சாமான்களை வாங்கிவருவார்களென்றும் அதனால் உள்ளூர்வியாபாரம் நஷ்டமடையுமென்றும், துரைத்தனத்தாருக்கு வரும்படி கம்மியாகுமென்றும் தர்க்கித்தார்கள். தவிரவும் நாட்டிலுள்ள விசித்திரமான பற்பல காக்ஷிகள் அழிந்து வெட்டவெளியாகப் போய்விடுமென்றும் சிலர் பேசினார்கள். இவ்வாறாகச்செய்த ஆக்ஷேபங்களை யோசித்துப்பார்க்க மிகவும் விநோதமாயிருக்கும். நாட்டிலுள்ள பெரிய குடித்தனக்காரர்களும் இருப்புப்பாதையால் தங்களுக்கு நஷ்டம் உண்டாகுமென்று பயந்து துராக்ஷேபஞ் செய்தவர்களுக்குச் சகாயமாயிருந்தார்கள். மேலேசொன்ன ஆக்ஷேபங்களிலெல்லாம் குதிரைகள் விருத்தி ஆகாதென்று சொன்னது மிகவும் புத்தியீனமான காரியம். ஏனெனில் இருப்புப் பாதை உண்டானபின்பு குதிரைகள் முன்னினும் அநேகமடங்கு விருத்தியானதோடு கூட, அவற்றின் விலையும் நூற்றுக்கு ஐம்பதுவீதம் உயர்ந்திருக்கின்றது. புகைவண்டியைக்கண்டு ஆடுமாடுகள் பயந்தோடுகிறதில்லை. நாட்டுவியாபாரம் முன்னினும் பதின்மடங்கு நன்றாக நடந்துவருகின்றது. கிராமத்தார்கள் சகல சவுக்கியமும் பொருந்தி நாளுக்குநாள் விருத்தியாகிறார்கள். நாட்டுப்புறத்திலுள்ள விநோதக் காக்ஷிகளுக்கு இருப்புப்பாதையால் சேதம் உண்டானதாகத் தோன்றவில்லை. மறைந்திருந்த காக்ஷிகள் புகைவண்டியால் வெளியாயின. இப்பெரும்பயன் கிடைப்பதாயிருந்தும் அதை அறியாமல் வழக்கம்போல் ஆக்ஷேபமே செய்தார்கள்.

அக்காலத்தில் மேலேசொன்னவாறு ஆக்ஷேபம்செய்தவர்கள் பின்னிட்டுத் தங்கள் ஆக்ஷேபங்களெல்லாம் தெரியாததன்மையால் உண்டாயினவென்று தாமே அறிந்து வெட்கமும் துக்கமும் அடைந்தார்கள். பெரிய பிரபுக்களில் சிலர் தம்முடைய கிராமங்களில் இருப்புப்பாதை போடுவதால் கெடுதிசம்பவிக்குமென்று பயந்து போடவொட்டாமல் தடைசெய்தார்கள். சிலகாலங் கழித்தபின்பு இருப்புப்பாதைபோட்ட ஊர்களெல்லாம் செழித்து விருத்தியாகிறதைக் கண்டு தங்களுடைய அறிவின்மையை நினைத்து மனநொந்து புகைவண்டியால் உண்டாகும் பலனைத் தாங்களும் அனுபவிக்கும்பொருட்டுப் பற்பல உபாயங்களைத் தேடினார்கள். பெரிய வீதிகளுக்கு ஊடே இருப்புப்பாதை போடுவதால் சேதமுண்டாகுமென்று அதை விலக்கிய சில நகர்விசாரணைகர்த்தர்கள் நாளாவர்த்தியில் தாம்கொண்ட எண்ணம் தப்பெண்ணமென்று தெளிந்து தம்முடைய பட்டணங்களிலும் இருப்புப்பாதை போடவேண்டுமென்று பிரயத்தனஞ்செய்தார்கள். அதனால் மிகுந்த செலவுநேரிட்டது.

இருப்புப்பாதை முதலாகிய விசேஷமான புது ஏற்பாடுகளுக்குத் தற்பொழிவினாலும் தப்பெண்ணத்தினாலும் ஆக்ஷேபஞ்செய்ததாகப் பின்னிட்டுத் தெரியவந்தது. அவைகளன்றி வேறொரு முக்கியமான காரணமும் உண்டு. புதிய ஏற்பாடுகளால் இனிமேலுண்டாகும் வேறுபாடுகளைக் கண்டறியும் சக்தி மிகவும் அருமையானது. அந்த வல்லமையில்லாத ஜனங்கள் விபரீதமான ஆக்ஷேபஞ்செய்வது இயல்புதான். அவர்கள் தற்காலநிலைமையைமாத்திரம் அறியக்கூடுமேயன்றி பிற்காலத்தில் எவ்விதகாரணங்களால் எது எவ்வாறு மாறுமென்று தெரிந்துகொள்ள

முடியாது. அபிவிர்த்தியின்பொருட்டுச் செய்கிற ஏற்பாடுகளில் அவர்களுக்குச் சற்றேனும் நம்பிக்கைவருவதில்லை. எவ்வளவு தெளிவாய்ச் சொன்னபோதிலும் விழலுக்கு இறைத்த நீர்போலமுடியும். அவர்கள் யாவரும் நகரங்களைச் சீர்திருத்தவும், பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் வெளியிலிருந்து தெளிவான ஜலங்கொண்டுவந்துவிட்டு ஜலசௌக்கியம் உண்டாக்கவும், நதிகளிலும் ஏரிகுளங்களிலும் இருக்கிற ஜலம் கெட்டுப்போகாமலிருக்கவும், காலத்துக்குக்காலம் செய்துவருகிற ஏற்பாடுகளுக்கு ஆக்ஷேபம்செய்யாமல் இருப்பதில்லை. அது அவர்கள் சுபாவம். இதுதவிர தற்பொழிவும் துராக்ஷேபம் செய்வதற்குக் காரணமென்று சொன்னோம். தற்காலநிலைமையினால் திருப்தியடைந்து அதை விருத்திசெய்ய அசக்தராயிருப்பதோடுகூட, அபிவிருத்திசெய்வதற்குப் புகுவோமானால் திரவியசகாயம் வேண்டுமென்றும், அதன்பொருட்டுத் தாம் வரிகொடுக்கநேரிடுமென்றும் எண்ணி வீண் ஆக்ஷேபம் செய்கிறவர்களும் உண்டு. காற்றையும் ஜலத்தையும் பரிசுத்தப்படுத்திப் பெருவாரியான நோய் அணுகாவண்ணம் ஏற்பாடுசெய்வதற்குப் பணங்கொடுக்கச் சம்மதியார்கள். நோயினால் வருந்தி ஆயிரங்கணக்காய் மாண்டபோதிலும் பணத்தைச் செலவுசெய்ய மனம்வராது. எங்கிலாந்துதேசத்தில் ஒரு பெரிய பட்டணத்தில் சாக்கடைகளை நன்றாகச் சுத்தம்செய்யாததினால் நாற்றமெடுத்துப் பலவிதமான நோய்கள் உண்டாயின. அப்பட்டணத்தில் ஜலம்கிடைப்பது அருமை. அது கண்டு அந்த நகரவிசாரணைச்சபையார் பரிசுத்தமான ஜலத்தை வெளியிலிருந்து கொண்டுவந்து சாக்கடைகளை நன்றாகக் கழுவவேண்டுமென்று தீர்மானித்துச் செல்லும்செலவுக்கு ஆளுக்கு முக்கால்ரூபாவீதம் வரிகொடுக்கவேண்டியதென்று குடிகளுக்குத் தெரியப்படுத்தினார்கள். பணச்செலவுக்காக அந்த ஏற்பாட்டுக்கு ஒருவரும் சம்மதிக்கவில்லை. இவ்வாறாக வேறுசில பட்டணங்களில் நடந்த பிரயத்தனமும் முடியவில்லை. குறைந்தசெலவில் செய்த வேறு உபாயங்களெல்லாம் பிரயோசனப்படவில்லை. கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவுசெய்திருந்தால் நஷ்டம் நேரிட்டிராது. செலவைச் சுருக்கிச்செய்யும் ஏற்பாடுகளெல்லாம் பயனில்லாமற்போய்விடும். இதை அனுபோகத்தில் யாவரும் கண்டறியலாம்.

## எலும்புகளின் இயற்கையும் முதற்கருவிகளும்.

எந்தெந்த வஸ்துக்கள் சேர்ந்து ஒரு பொருள் உண்டாகின்றதோ, அந்த வஸ்துக்களெல்லாம் அப்பொருளுக்கு முதற்கருவிகள் அல்லது சாமக்கிரியென்னப்படும். போஜனத்திற்கு அரிசி, உப்பு, புளி, முளகாய் முதலியவை சாமக்கிரியாம். வீட்டுக்கு கல், சுண்ணாம்பு, மரம்முதலியவை சாமக்கிரியாம். அப்படியே நமது தேகத்தின் பற்பல உறுப்புகளுக்கும், அதைப் போஷிக்கின்ற ரத்தத்திற்கும், அந்த ரத்தத்தை உண்டாக்குகிற உணவிற்கும்சாமக்கிரிகள் உண்டல்லவா? அவை இவையென்று நாம் நன்றாய் அறிந்துகொண்டோமானால், பிறகு நாம் உட்கொள்ளுகிற உணவுகள் நமது

தேகத்தின் பற்பல உறுப்புகளாக மாறுகிற விநோதச்செய்கைக ளெல்லாம் இப்படிப்பட்டவையென்று தெளிவாய் அறிந்துகொள் ளலாம்.

நமது தேகத்திலுள்ள எலும்பு பல வஸ்துக்கள்சேர்ந்து உண்டான ஒருவகை விநோதப் பொருளாகையால் அதைப்பற்றி முதலில் விசாரிப்போம். எலும்பென்பது சாதாரணமான அற்ப ஜந்துக்களு டைய உடலில் கிடையாது. மனிதன் விலங்குமுதலான உயர்ந்த வகுப்புகளிலேதான் உண்டு. ஜீவப்பொருளும், ஜடப்பொரு ளும் கலந்து எலும்பு உண்டாயிருக்கிறது. எலும்பைத் தீயில்வைத்து நன்றாய் எரித்து ஆற்றிப்பார்த்தால், சீமைச்சுண்ணும்புபோன்ற வெ ளுத்த ஒருவகைப் பொருளாகி, தொட்டால் ஒடிந்துபோம்படி மிக வும் நொய்யதாய்க் காணப்படும். எடையும் மிகக்குறைந்துபோம். சிறுசிறு துவாரங்களும் சிறு வாய்க்கால்களும் அதில் நிறைந்திருக் கும். அதேனெனில், அந்தத் துவாரங்களையும் வாய்க்கால்களை யும் அடைத்துக்கொண்டிருந்த ஜீவப்பொருள்களெல்லாம் நெருப் பில் தீந்துபோய், ஜடப்பொருள்மாத்திரம் நின்றிருப்பதனால் அப் படியாகிறது. அப்படியில்லாமல் ஜடப்பொருள்களையெல்லாம் கரை த்துப்போடுகிற உக்கிரமான ஒருவகைத் திராவகத்தில் போட்டு அதிலுள்ள ஜடப்பொருள்களையெல்லாம் கரையச்செய்து ஜீவப்பொ ருள்களைமாத்திரம் நிறுத்திப்பார்த்தால், அந்த எலும்பு முன்னிருந்த உருவமும் மாதிரியும் மாறுமலே, கைக்கு மிகவும் மெதுவாயும், அவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து ஒரே உண்டையாக உருட்டக் கூடும்படி அவ்வளவு வணங்கத்தக்கதாயும் ஆய்விடும்.

இவ்வாறு எலும்புக்கு முதற்காரணமாயிருக்கிற இருவகைப்பொ ருள்களையும் நாம் வெவ்வேறாகப் பிரித்துக்காணலாம். பிரகாசிதம் என்னும் ஒருவகைப்பொருளும் சுண்ணும்புஞ்சேர்ந்து உண்டான ஒருவகை உப்புதான் (Phosphate of Lime) எலும்பிலிருக்கின்ற ஜடப்பொருள். பிரகாசிதமென்பது இருளில் பிரகாசிக்கத்தக்கதான ஒருவகை மெழுக்குபோலிருக்கும். அது ஒருவகை உப்பாகமாறி ஏறக்குறைய தேகமெங்கும் பரவியிருக்கின்றது.

ஜீவப்பொருள் ஒருவகை வெண்கருவும் (Albumen), ஜிலதின் (Gelatine) என்கிற ஒருவகை வஸ்துவும் சேர்ந்து ஆகின்றது. வெண்கரு வேறொன்றும் கலவாமல் சுத்தமாயிருக்கும்போது வெண்ணிறமாயும், ஊடுருவிப்பார்க்கத்தக்கதாயும் இருக்கிற ஒரு வகை திராவகமாயிருக்கும். அதை வெந்நீரில் ஊற்றினால் தோய் ந்துபோம். அது தேகத்தின் நாம்புகளுக்குள் எல்லாம் (Tissue) வியாபித்திருக்கின்றது. அதுதான் தேகபோஷணத்திற்கு முதற் காரணமென்று தோன்றுகிறது. முட்டைகளிலிருக்கிற வெண்மை களெல்லாம் அநேகமாய்ச் சுத்தமான வெண்கருத்தான். அது தான் குஞ்சுபொரிப்பதற்குமுன் முட்டைக்குள் இருக்கிற குஞ்

சைப் போஷித்து அதின் எலும்பு, தசை, ரத்தம், நரம்பு, இறகு இவைகளை வளர்க்கின்றது

ஜிலதின் என்பது சுத்தமாயிருக்கும்போது மெதுவாயும், அசையத்தக்கதாயும், பாதி தோய்ந்ததாயும் இருக்கும். வெந்நீர்பட்டால் உருகிப்போம். இவ்விரண்டு ஜீவப்பொருளும் ஒன்ருய்ச்சேர்ந்து, வலைபோல் நிரம்பச் சிறு சிறு துவாரங்களுள்ளதாயிருக்கும். அந்த ரந்திரங்களெல்லாம் ஜடப்பொருளால் அடைக்கப்பட்டிருக்கின்றன. அது முழுதும் நுண்ணியதான ரத்தநாடிகள் நிறைந்திருக்கும். இப்படிப் பல பொருள்கள்சேர்ந்து உண்டான ஜீவப்பொருளும் ஜடப்பொருளும் கலந்து எலும்பாகின்றன. அப்பொருளுக்கு அடிக்கடி புஷ்டியுண்டாக்கிஞல்தான் எலும்பு வளர்ந்துகொண்டிருக்கும்.

இத்தன்மையான எலும்புகளின் நுனியைக் கவர்ந்துகொண்டு, இரண்டு எலும்புகளை ஒன்ருய்க் கூட்டுகிற உபாஸ்தி அல்லது முருந்தானது ஜீவப்பொருளும் ஜடப்பொருளுமாகிய இதேவஸ்துக்களாலேதான் உண்டாகின்றது. ஆயின் ஒன்று—அதில் ஜடப்பொருள் கொஞ்சம்; ஜீவப்பொருளும் நீரும் அதிகம். சிறுபிள்ளைகளின் எலும்புகள் வெகுவாய் முருந்தாயே இருக்கும். வயதேற ஏற ஜடப்பொருளால் அதிலுள்ள ரந்திரங்களெல்லாம் நிரம்பிக் கடைசியில் ஒரே எலும்பாகிவிடுகிறது.

எலும்புகளெல்லாம் இலேசாயும் உரப்பாயுமிருக்கும். தொடை எலும்புமுதலான பெரிய எலும்புகள் குழலாகி, அவை நிரம்ப மச்சையென்கிற ஒருவகைக் கொழுப்பைக்கொண்டிருக்கும். மொத்தம் சுமார் நூற்றைம்பத்துநான்கு இராத்தல் நிறையுள்ள ஒரு மனிதனுடைய கங்காளமானது (எலும்புக்கூடு) இருபத்துநான்கு இராத்தல்தானிருக்கும்.

## சிறுவர்க்கான கதை.

2-வது. ஒருகண்ணி, இருகண்ணி, முக்கண்ணி.

முற்காலத்தில் ஒரு தேசத்தில் ஒரு பெண்பிள்ளை இல்வாழ்க்கை செய்துகொண்டிருந்தாள். அவளுக்கு மூன்று பெண்கள் இருந்தார்கள். அவர்களுள் முதல்பெண்ணுக்குச் சாதாரணமானவர்களுக்கிருப்பதுபோலிராமல் முகமத்தியில் ஒரேகண் இருந்ததஞல் ஒருகண்ணி என்றும், இரண்டாம் பெண்ணுக்கு யாவர்க்கும் இருப்பதுபோலவே இரண்டு கண்ணிருந்ததஞல் இருகண்ணி என்றும், மூன்றும்பெண்ணுக்குச் சாதாரணமான இரண்டு கண்கள்தவிர முகமத்

தியிலும் ஒருகண் இருந்ததனால் முக்கண்ணி என்றும் பெயரிடப்பட்டன. இருகண்ணியினிடத்தில் எல்லாரிடத்திலும்விட யாதொரு புதுமையும் இல்லாமையால், அவளைத் தாயும் சகோதரிகளும் பகைத்து மிகவும் அலக்ஷியஞ்செய்தார்கள். அவள் சகோதரிகள்: 'நீ சாதாரண ஜனங்கள்போலவேயிருப்பதனால், எங்களில் சேர்ந்தவளல்ல என்றுசொல்லி அப்பெண்ணுக்குத் தாங்கள் கட்டிக்கிழிந்த கந்தையையும், தின்றுமிகுந்த சோற்றையும் கொடுப்பார்கள்.

இப்படியிருக்கையில் இருகண்ணி ஆடுமேய்க்கக் காட்டுக்குப்போம்படி நேரிட்டது. ஒருநாள் தன் சகோதரிகள் இட்ட உணவு தன் வயிற்றுக்குப் போதாமையால் அவள் ஆடுமேய்க்கப் போனவிடத்தில் பசியால்வருந்தி ஒரு பாறையிலுட்கார்ந்து கண்ணீர் மாலைமாலையாய்ப் பெருகப் புலம்பத்தலைப்பட்டாள். அப்போது "அகதிக்கு ஆகாயமே துணை" என்கிறபடி, ஞானியான ஒரு பெண்ணரசி எதிரே வந்துநின்று: நீ அழுவதற்குக் காரணமென்னவென்று கேட்க, இருகண்ணி: அம்மா! நான் என்னசொல்வேன்; எல்லார்க்குமிருப்பதுபோலவே எனக்கு இரண்டுகண் இருக்கிறதனால் என் தாயும் சகோதரிகளும் என்னைப் பகைத்து ஒரு மூலையில் தள்ளிவைத்து நல்ல சோறு துணிகூடக் கொடாமல் கொல்கிறார்கள். இன்றைய தினம் அவர்கள் இட்ட அற்பச்சாப்பாடு எனக்குப் போதாமையால் பசி மிகவும் வருத்துகிறதென்று சொன்னாள். அதைக்கேட்டு, அந்தப் பெண்ணரசி: குழந்தாய்! அப்படியானால் நீவிசனப்படாதே; உன் கண்ணைத் துடை; நான் சொல்கிறபடி கேட்டால் நீ ஒருபோதும் பசியால் வருந்தமாட்டாய்; உன் ஆட்டுக்குட்டியை நோக்கி: "ஓ ஆட்டுக்குட்டியே! நீ நல்ல உணவுகள் நிறைந்த போஜனபாத்திரத்தைக் கறக்கக்கடவை" என்று வேண்டினால் உடனே எவ்வகை உணவும் நிறைந்த பாத்திரம் ஒன்று எதிரே தோன்றும். நீ வேண்டியதைப் பசியாறப் புசித்தபின்பு, "ஓ ஆட்டுக்குட்டியே! இப்பாத்திரத்தை மறைக்கக்கடவை" என்று சொன்னால் உடனே மறைந்துபோம் என்றுசொல்லிவிட்டு அவள் கண்காணமல் போயினாள்.

இருகண்ணி தான் மிகவும் பசித்திருப்பதனால் அந்த ஞானப்பெண் சொன்னது மெய்யோபொய்யோ பார்ப்போம் என்று அவள் சொன்னபடியே, "ஓ ஆட்டுக்குட்டியே! நல்ல உணவுகள் நிறைந்த போஜனபாத்திரத்தைக் கறக்கக்கடவை" என்றாள். உடனே அத்தன்மையான கிண்ணமொன்று அவளெதிரே நின்றது. அதைப்பார்த்து அவள் சந்தோஷமடைந்து, தனக்குத் தெரிந்தவளவு கடவுளைத் தியானித்து, அவர்க்கு அவ்வுணவுகளை நிவேதனஞ்செய்து தான் பசியாறப் புசித்துப் பின்பு: "ஓ ஆட்டுக்குட்டியே! இப்பாத்திரத்தை மறைக்கக்கடவை" என்றாள். உடனே அது மறைந்துபோயிற்று. அதைப்பார்க்கவே அவள், நமது ஜீவனத்

துக்குக் கடவுள் நல்ல சுகமான வழி கற்பித்துக்கொடுத்தார் என்று, பேரானந்தமடைந்தாள்.

அன்று சாயங்காலம் இருகண்ணி ஆட்டை மடக்கிக்கொண்டு வீட்டுக்குப்போனபின்பு, தனக்காகத் தன் சகோதரிகள் ஒரு மட்பாத்திரத்தில் ஒரு மூலையாய் எறிந்துபோட்டிருந்த சோற்றைத் தொட்டுப்பார்க்கவேயில்லை. பிறகு சிலநாள் இப்படியே நடந்துகொண்டுவந்தது. இரண்டு மூன்று நாள்வரையில் அவள் வீட்டில் சோறுதின்னுமலிருப்பதை ஒருவரும் அவ்வளவாய்க் கவனிக்கவில்லை. பலதடவைகளிலும் அவள் தாங்கள் இட்ட சோற்றைத் தீண்டாமலிருக்கவே, அவள் சகோதரிகள் சந்தேகப்பட்டு, ஒருநாள் அதை ஊன்றிப்பார்த்து: இருகண்ணியண்டை ஏதோ ஒரு புதுமையிருக்கிறது, இல்லாவிட்டால் இத்தனை நாளாய் நாம் இட்ட உணவைப் புசித்துவந்தவள், இப்போது சும்மா இருப்பதற்குக் காரணமென்னவென்றுசொல்லி, அதைக் கண்டறியும்படி ஒருகண்ணியை அவளுடன் காட்டுக்கு அனுப்புவதாய்த் தீர்மானித்தார்கள். அப்படியே, மறுநாள் காலையில் இருகண்ணி ஆட்டையோட்டிக்கொண்டு புறப்படும்போது, ஒருகண்ணி அவளண்டைவந்து, "நீ ஆட்டை நல்ல பசும்புற்றரையில் ஓட்டிக்கொண்டுபோய் நன்ருய் மேய்க்கிருயா பார்க்கவேண்டும்; நானும் வருகிறேன்" என்று சொன்னுள். அதைக்கேட்டு, ஒருகண்ணி அவள் உட்கருத்து இன்னதென்று அறிந்துகொண்டு, "உட்காரலாம் வா; உட்காரலாம் வா" என்று சொல்லிக்கொண்டே அவளை வெகுதூரம் நடத்தி அழைத்துக்கொண்டுபோய் நல்ல பசும்புற்றரையில் ஆட்டைக் கொண்டுவிட்டு, "நீ உட்கார்" உன் களைதீர நான் இனிப்பாய்ப் பாடுகிறேன் என்ருள். ஒருநாளும் நடவாதவள் வெகுதூரம் வெயிலில் நடந்துவரவே, ஒருகண்ணி மிகவும் ஓய்ந்துபோய் ஓரிடத்தில் படுத்தாள். "ஒரு சிறுகண்ணே! விழித்திருக்கிறையா? ஒரு சிறுகண்ணே! கண்வளர்கிறையா?" என்று இருகண்ணி பாடவே, அவள் உடம்புதெரியாமல் தூங்கிப்போனுள். அத்தருணங்கண்டு இருகண்ணி வழக்கப்படி, "ஓ ஆட்டுக்குட்டியே! நீ நல்ல உணவுகள் நிறைந்த போஜனபாத்திரத்தைக் கறக்கக்கடவை" என்ருள். அப்படியே அது வந்துசேரவே திருப்தியாய்ப் புசித்துவிட்டு: "ஓ ஆட்டுக்குட்டியே! இப்பாத்திரத்தை மறைக்கக்கடவை" என்ருள்; அது போய்விட்டது. பின்பு இருகண்ணி ஒருகண்ணியை எழுப்பி: "அம்மா! நீ ஆடுகளை மேய்ப்பதாய் வேஷம்போட்டுத் தூங்கிப்போனுயே! இத்தனை நாழிகைக்குள் ஆடுகளெல்லாம் நாலாமூலையும் ஓடிப்போயிருக்குமே; நல்லது பொழுதுபோயிற்று; வீட்டுக்குப்போவோம் வா" என்று அவளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குவந்து அன்றைய தினமும் இரையெடாமல் இருந்தாள். இதென்னவென்று வீட்

டிலுள்ளார் கேட்டதற்கு, ஒருகண்ணி: "என்னை மன்னிக்கவேண்டும்; நான் போனவிடத்தில் ஒன்றும்பாராமல் தூங்கிப்போயினேன்" என்றாள்.

மறுநாள் தாயானவள் முக்கண்ணியை அழைத்து, இன்றையதினம் நீ போய் இவளுக்குச் சோறுதண்ணீர் யாராவது கொண்டுவந்து கொடுக்கிறார்களா பார்த்துவா என்று சொல்ல, அவள் அதைக்கேட்டு இருகண்ணியண்டைவந்து: நான் இன்றையதினம் உன்னுடன் வருகிறேன் என்று சொல்லவே, அவள் கருத்தை அறிந்துகொண்டு இருகண்ணி: அவளை வெகுதூரம் அழைத்துக் கொண்டுபோய் இங்கே உட்காரலாமென்றாள். முக்கண்ணி வெகுதூரம் நடந்ததனாலும் வெயிலினாலும் மிகவும் களைத்துப்போயினாள். இருகண்ணி அவளுக்குப் பாடத்தொடங்கி: "முச்சிறுகண்ணே! விழித்திருக்கிறையா?' என்று பாடியபிறகு, "முச்சிறுகண்ணே! கண்வளர்கிறையா?" என்று சொல்லவேண்டியிருக்க, ஏதோ ஒரு ஞாபகத்தால், "இருசிறுகண்ணே கண்வளருகிறையா?" என்று தப்பிதமாய்ச் சொல்லி, அவ்வாறே பலதடவை பாடினாள். அப்படிப் பாடவே முக்கண்ணியின் இரண்டுகண்கள்தாம் மூடிப்போயின. அவள் பாடாமையால் மூன்றாம்கண்மாத்திரம் திறந்தேயிருந்தது. முக்கண்ணி கபடமாய் அதையும் மூடிக்கொண்டு, "என்ன நடக்கிறதோ அறியலாமென்று மூன்றுகண்களாலும் தூங்குவதுபோலிருந்தாள். அவள் தூங்குகிறாளென்று எண்ணி இருகண்ணி, வழக்கப்படி தான் சொல்லவேண்டிய சொற்களைச் சொன்னதனால் எதிரே வந்துநின்ற ஆகாரத்தை உண்டு, மறுபடியும் பாடி அதைப் போகச்செய்தாள். இவைகளையெல்லாம் முக்கண்ணி திருட்டுத்தனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். தான் தின்றானதும் இருகண்ணி, அவளை வந்தெழுப்பி, நல்ல காவல்காத்தாய்! வீடு போய்ச் சேருவோம் வாவென்று அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்து அன்றையதினமும் இரையெடாமலிருந்தாள். முக்கண்ணி உடனே தாயண்டைவந்து, அம்மா! இருகண்ணி வீட்டில் தீனி தின்னாமலிருப்பதற்குக் காரணம் நான் அறிந்துகொண்டேனென்று நடந்ததை நடந்தபடியே சொன்னாள். அதைக் கேட்டவுடனே தாய் பொறாமைகொண்டு, நீ எங்களைப்பார்க்கவும் மேன்மையாயிருக்கிறாயா! என்று இருகண்ணிக்கு இத்தனைநாளாய் உணவு உண்டாக்கிக் கொடுத்த ஆட்டுக்குட்டியைக் கொன்றுபோட்டாள்.

அதைப்பார்க்கவே இருகண்ணி மிகவும் விசனமடைந்தவளாய் வெளியேசென்று, ஒரு குன்றின்மேல் உட்கார்ந்து தீனமாய்ப் புலம்பத்தொடங்கினாள். அத்தருணத்தில் முன்போலவே ஞானியான ஒரு பெண்பிள்ளை அவளெதிரேதோன்றி நீ ஏன் அழுகிறாயென்று கேட்க, அவள்: நான் துக்கப்படத்தானே பெண்பிறந்தேன்; நீர்செய்த பேருதவியால் இத்தனைநாள் எனக்குப் போஜன

மளித்துக்கொண்டிருந்த ஆட்டுக்குட்டியை என் தாய் கொன்றுபோட்டாள். இனி நான் பழையபடியே பசியால் வருந்தும்படியாயிற்றே என்று துக்கமாயிருக்கிறதென்ருள்.

அதைக் கேட்டவுடனே அந்த ஞானி: அம்மா! உனக்கு ஒரு உபாயம்சொல்லுகிறேன் கேள்: அந்த ஆட்டுக்குட்டியின் குடல்மாத்திரம் கொஞ்சம் உன் சகோதரிகளைக் கேட்டுவாங்கி வீட்டுவாயிலண்டை புதைப்பாயானால் உனக்குச் சுகங்கிடைக்குமென்று சொல்லிவிட்டு மறைந்தாள். இருகண்ணி உடனே வீட்டுக்குவந்து: "என் அருமைச்சகோதரிகளே! இவ்வாட்டுக்குட்டியின் உடலில் கொஞ்சம் எனக்குக் கொடுக்கிறீர்களா? நான் வேறொன்றும் கேட்கவில்லை; ஒருவர்க்கும் உபயோகமில்லாத குடலாவது கொஞ்சங்கொடுத்தால் போதுமென்ருள். அதைக் கேட்டு அவர்கள் நகைத்து, அதற்கென்ன நீ வேண்டியது எடுத்துக்கொள்ளலாமென்ருர்கள். இருகண்ணி அதை எடுத்து ரகசியமாய் அந்த ஞானி சொன்னபடியே வாயிலண்டை புதைத்தாள்.

மறுநாள் காலையில் அவர்கள் எழுந்துபார்க்கும்போது வெள்ளி இலைகளும் பொற்பழங்களுமாய்க் குலுங்க விநோதமான விருக்ஷமொன்று வீட்டுவாயிலண்டையிருந்தது. இருகண்ணியின் சகோதரிகள் இருவரும் இதென்ன ஆச்சரியமென்று திகைத்துப் போனார்கள். அவள்மாத்திரம், தான் குடலைப்புதைத்த இடத்திலேயே அம்மரம் உண்டாயிருப்பதால் அதினின்றுதான் முளைத்திருக்கவேண்டுமென்று குறிப்பாய்க் கண்டறிந்தாள்.

தாயானவள் அதைப் பார்த்தவுடனே அம்மரத்திலேறிப் பழங்களையெல்லாம் பறிக்கும்படி ஒருகண்ணிக்குக் கட்டளையிட, அவள்: அப்படியே அம்மரத்திலேறிப் பழத்தைப் பறிக்கக் கையை நீட்டிநீட்டித் தாவினாள். அவை அவள் கைக்கு எட்டாமலே ஒதுங்கிநின்றன. வெகுநேரமளவும் வீணாய்வருந்தி உபயோகமில்லாமல் கீழே இறங்கிவிட்டாள். அதைக்கண்டு தாய் மூக்கண்ணியை அழைத்து: குழந்தாய் நீயானால் உன் மூன்று கண்களைக்கொண்டு நன்றாய்ப் பார்த்துப் பறிக்கக்கூடும், ஏறிப் பார் என்ருள். அவளும் ஒருகண்ணியைப்போலவே ஏறிப் பயனில்லாமலே இறங்கிவிட்டாள். தாய் அதைப் பறிக்க மிகவும் ஆவல்கொண்டு தானே மரத்திலேற, பழங்களெல்லாம் கைக்கு அகப்படுவதுபோலிருந்து ஒத்தியொத்திப்போகவே, வீணாய் ஆகாயத்தைப் பிடித்துப்பிடித்துவிட்டு ஒன்றுமில்லாமல் தன் அருமைப்பெண்கள்போலவே தானும் கீழேவந்துசேர்ந்தாள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இருகண்ணி: நானும் சற்று ஏறிப்பார்க்கலாமா என்ருள். அவர்கள்: ஆ! ஆ! நீயா! உன் இரண்டுகண்களைக்கொண்டு நீ ஒருநொடியில் ஏறிப்பறித்துப்போடமாட்டாயா! துரிதமாயேறு என்று பரிகாசம்பண்ணினார்கள். ஆயி

னும் அவள் மரத்தின்மேலேறிக் கிளையைத் தாவுதற்கு முன்னமே அந்தப் பொற்பழங்களெல்லாம் தாமே அவள் மடியில்வந்து விழுந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு அவள் கீழிறங்கினவுடனே அந்தப் பழங்களையெல்லாம் தாய் வாங்கிக்கொண்டாள். ஆயினும் அந்தப் பெண்ணிடத்தில் சிறிதும் நன்றிபாராட்டாமல் போயினாள். அவள் சகோதரிகளும், அவளிடத்தில் நன்றிபாராட்டி விசேஷபக்ஷமாயிருக்கவேண்டியிருக்க, நம்மால் பறிக்கக்கூடாத பழத்தை இவள்மாத்திரம் பறித்தாளேயென்று முன்னிலும் அதிகமாய்ப் பொறாமையடைந்தார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் இப்பெண்கள் மூவரும் அம்மரத்தின் கீழ் உட்காந்திருக்கிறதருணத்தில் ஒரு ராஜகுமாரன் அதேவழியாய் வருவதை வெகுதூரத்திலேகண்டு, அருமைப்பெண்கள் இருவரும் இருகண்ணியைப்பார்த்து: நீ வழியைவிட்டு ஒருமூலையாய்ப் போயிரு; இல்லாவிட்டால் உன்னால் எங்களுக்கு அவமானம் நேருமென்று சொல்லி, அவளை ஒரு பக்கத்தில் தள்ளி அண்டையிலிருந்த ஒரு கூடையை அவள்மேல் கவிழ்த்துமூடினார்கள். அப்போது அவள் பறித்த கொஞ்சம் பழமும் அதன்கீழ் அகப்பட்டது. அவர்கள் நினைத்தபடியே அந்த ராஜகுமாரன் வந்து அம்மரத்தைப்பார்த்து ஆச்சரியப்பட்டு: "இது யாருடையது? இதில் எனக்கு ஒரு கிளைகொடுப்பீர்களா?" என்று கேட்க, அப்பெண்கள் இருவரும்: "இது எங்களுடையதே" என்று சொல்லி அம்மரக்கிளையை ஒடிக்கத்தாவினார்கள். ஒன்றும் அவர்கள் கைக்கு அகப்படவில்லை. அதுகண்டு ராஜகுமாரன்: "இது நல்ல ஆச்சரியம்! இம்மரம் உங்களதென்கிறீர்கள்; ஆயினும் அதன் ஒரு இலையைக்கூட நீங்கள் பறிக்கமாட்டவில்லையே" என்று பேசிக்கொண்டிருக்கையில் இருகண்ணி, இவர்கள் உண்மையை வெளியிடவில்லை பார்த்தையாவென்று தன்னண்டையிலிருந்த சில பழங்களை அவன் காலண்டைபோய் விழும்படி எறிந்தாள்.

ராஜகுமாரன் அவைகளைப்பார்த்து இதெங்கிருந்துவந்து விழுகிறதென்று கேட்க, அவர்கள்: எங்களுக்கு இன்னும் ஒரு உடன்பிறந்தாளுண்டு, இது அவளெறிந்தது; சாதாரணமானவர்களுக்கு இருப்பதுபோல் அவளுக்கும் இரண்டுகண்ணே இருப்பதால் அவளை நாங்கள் வெளியே வரவொட்டுகிறதில்லை என்றார்கள். ராஜகுமாரன்: எப்படியாயினும் அவளைப் பார்க்கவேண்டுமென்று அவளையழைக்கவே, அவள் கூடையைத் திறந்துகொண்டு வெளியேவந்தாள். ராஜகுமாரன் அவள் அழகைப்பார்த்து அதிசயப்பட்டு, ஓ இருகண்ணே! இதிலோர் கிளையொடிக்கமாட்டுவையா? என்று கேட்க, அவள்: இம்மரம் என்னுடையபொருள் ஆகையால் நான் ஒடிக்கமாட்டுவேன் என்று சொல்லிக்கொண்டே மரத்திலேறி வெள்ளியிலைகளும் பொற்பழங்களும் நிறைந்த கிளையை ஒடித்துக்கொடுத்தாள். அந்த

ராஜபுத்திரன் சந்தோஷப்பட்டு உனக்கு என்னவேண்டுமென்று கேட்க, இருகண்ணி: எனக்கு என்னவேண்டியது! இங்கே சோறு துணியில்லாமல் இவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு அல்லாடுகிறேனே; இந்தத் துயரத்தை இனிமேலும் அனுபவியாமல் என்னை உம்முடன் இட்டுக்கொண்டுபோவீரானால் அதுவே எனக்கு மேலான கொடை என்றாள். ராஜகுமாரன் உடனே அவளைக் குதிரைமேல் எடுத்துவைத்துக்கொண்டு தன் பட்டணம்போய்ச் சேர்ந்து அவளுக்கு வேண்டியவையெல்லாம் கொடுத்து வெகு சம்பிரமத்தோடு அவளைக் கலியாணஞ்செய்துகொண்டு வெகு நேசமாய்ப் பாது காத்துவந்தான்.

இருகண்ணிக்கு அவ்வளவு செல்வங்கிடைக்கவே மற்றவர்களுக்கு முன்னினும் அதிகமாய்ப் பொறாமை உண்டாயிற்று. ஆயினும், நமக்கு இந்த அற்புதமான மரமிருக்கின்றதல்லவா? இதன் பழங்கள் நமது கைக்கு எட்டாவிடினும் இதைப் பார்ப்பவர்களெல்லாரும் நம்மை வந்து துதிக்கமாட்டார்களா? என்று எண்ணமிட்டுச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள். வீண் எண்ணம் கைகூடிவருமா? நாமொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைக்குமல்லவா? மறுநாள் அம்மரம் அவ்விடத்திலிராமல் மறைந்து போயிற்று. அதேசமயத்தில் இருகண்ணி, தான் மேன்மையாய் வாழ்ந்துகொண்டிருந்த அரண்மனைவாயிலிற் பார்க்கும்போது அங்கே அம்மரம் வெகு அழகாய் வளர்ந்திருந்தது.

இது நடந்த சிலநாளையில் இரண்டுபெண்கள் பிச்சையெடுத்துக் கொண்டு இருகண்ணி அரண்மனைக்குவந்தார்கள். அவள் உற்றுப் பார்த்து அவர்களிருவரும் தன் சகோதரிகளே; ஐயோ! அவர்கள் இவ்வளவு ஈனஸ்திதிக்கு வந்துவிட்டார்களே என்று பரிதாபப்பட்டு அவர்களைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு, அவர்கள் தாம் முன்செய்த கொடுமையை நினைத்துநினைத்துப் பச்சாத்தாபப் பட்டு மிகவும் பரிவோடு ஆதரித்துவந்தாள்.

## சமாசாரம்.

**பஞ்சத்தீமையைத் தணித்தல்.**—சென்னையில் வரவரப் பஞ்சத்தின் துன்பங்கள் பெருகுவது கேட்டு, பரிவுகூர்ந்து, இந்தூர் மஹாராஜா ஹொல்கார் பஞ்சத்தால் பீடிக்கப்படுவோர்க்கு எந்த ரூபமாயாவது கொடுத்து உதவிபுரியச் சென்னைக் கவர்ன்மெந்துக்கு எண்ணாயிரம் ரூபாய் அனுப்பி வைத்தார். வெளி ஜில்லாக்களில் பஞ்சத்தின் கொடுமையால் இப்பொழுது சிறிதுகாலம் சென்னைக் கஞ்சித்தொட்டிக்குத் தாய்தந்தையர் இல்லாத அநாதபிள்ளைகள் வந்து சேர்வதனால், அவர்களை வைத்தாதரிக்க இந்த

ரொக்கம் உதவுமென்று, மந்திராலோசனைத் தலைவாகிய கவர்னரவர்கள் கஞ்சித்தொட்டி நிர்வாக சபையார்வசம் குறித்த ரொக்கத்தை ஒப்பித்து, இவ்விசேஷ உபகாரத்திற்காக மேற்படி மஹாராஜாவிற்கு ராஜபுதனத்தில் உள்ள இந்திய ராஜபிரதிநிதி காரியகர்த்தர்மூலமாய் வந்தனம் எழுதி அனுப்ப நிர்ணயித்தார்கள்.

பார்லிமெந்து சபைகூடியது.—லண்டன் நகரம் நாளது பெப்ருவரிமீ 8௳ மஹாராணியாரவர்கள் பார்லிமெந்து சபையில் எழுந்தருளி, சிங்காதனத்தில் வீற்றிருந்து, கன்ஸ்டான்டிநோபிலில் கூடிய ஸ்தானுதிபதிகள் பேசித்தெளிந்த வரலாறுகளை எடுத்துரைத்தபின் செய்த பிரசங்கம்:—

ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்துவதும், துர்க்கியதுரைத்தன ஸ்வாதீனத்திற்கும் நிறைக்கும் பின்னம் உண்டாகாமல் கலகம் நேர்ந்த மாகாணங்களில் அரசாட்சிக்கிரமத்தைச் சீர்ப்படுத்துவதுமே அன்றுதொட்டு இன்றளவும் நமது அபிப்பிராயமாயிருக்கின்றது. அரசாட்சிச் சீர்திருத்தத்தை நோக்கிக் குறிப்பித்த உபாயங்களை ஸுல்த்தான் அங்கிகரிக்காததை நினைந்து வியசனப்படுகிறோம். ஆனால், ஐரோப்பா துரைத்தனத்தார் பெரும்பாலும் இவ்விஷயத்தில் பிணக்கின்றி இணங்கியிருப்பதாகச் சபையில் பேசித்தெளிந்த முடிவால் தெரிகின்றது. இவ்விணக்கத்தால் துர்க்கிய துரைத்தன ஸ்திதியில் பிரதான சித்தி உண்டாகாமற்போகாது. யுத்தம் நிறுத்தத் திட்டஞ்செய்திருப்பது, துர்க்கிக்கும், அதைச்சேர்ந்த பிரதேசங்களுக்கும் கௌரவபங்கம் இல்லாத சமாதான நிலைக்கு அனுகூலிக்குமென்று நம்புகிறோம். நமது சம்பந்திகளுடன் ஆதியோடந்தம் நட்புப்பொருந்தி நடந்தோம். அவர்களோடும் இதர துரைத்தனத்தாரோடும் நமது சம்பந்தநிலை தடையறாது இணக்கமாயிருக்கின்றது.

நாம் டில்லியில் இந்திய சக்கரவர்த்தினிப் பட்டம் சூடியதைக் குறுநில மன்னரும் இந்திய பிரஜைகளும் அன்போடும் ராஜபக்தியோடும் வாழ்த்தியதை நினைந்து மனம் களிகூர்ந்தோம். கடுமையில் 1873-ம் வருஷத்துப் பஞ்சத்திற்கு இளைக்காத இவ்வருஷத்துப் பஞ்சத்தால் விளையும் உபத்திரவம் பம்பாய் சென்னைப் பிரதேசங்களில் தலைப்படுவதைப்பற்றி நம் மனம் மிகு துயரடைகின்றது. அதை விர்த்தியாகவொட்டாமல் தடுக்க, வேண்டும் பொருள் விரயஞ்செய்யும்படி எத்தனம் நடந்தேறுமென்றும், இனி இவ்வகைப் பஞ்சம் உண்டாகாமல் தடுக்கவும், பஞ்சத்தால் விளையும் துன்பத்தைத் தணிக்கவும் அவசியமாய் வேண்டிய அனுபவம் பஞ்சத்தை நிவிர்த்தி செய்ய முயல்வோர்க்கு உண்டாமெனவும் நம்புகிறோம் என்றார்கள்.

Printed at the C. K. S. Press.